விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 12 வெள்ளிக்கிழமை (27.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 221

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# இறுதி யுத்த விசாரணைக்கு 5 ஆண்டுகள் தேவைப்படும்!

## இலங்கை அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பான விசாரணைகளை நடத்திமுடிக்க குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் தேவைப்படலாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது. அதற்காக குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்த ஒரு ஆண்டு காலமும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு 4 ஆண்டுகளும் தேவைப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## கனடா பிரஜை வடமராட்சியில் கைது

(கரவெட்டி)

வடமராட்சியை சேர்ந்தவரும் கனடா பிரஜையுமான குடும்பஸ்தர் ஒருவர் நேற்று வடமராட்சி வடக்கு வதிரியில் உள்ள அவரது வீட்டில் வைத்து பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

25 வருடங்களுக்கு முன்னர் கனடாவிற்கு சென்றிருந்த நிலையில் தனது சகோதரன் மகனின் திருமண வைபவமொன்றில் கலந்து கொள்வதற்காகவே மேற்படி நபர் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளுடன் இலங்கை (02ஆம் பக்கம் பார்க்க)

## கடையை உடைத்து பொருட்கள் களவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியின் ஸ்கந்தபுரம் மணியங்குளம் பகுதியிலுள்ள கடையை உடைத்து சுமார் ஒரு இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் களவாடி செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு கடையை பூட்டிவிட்டு கடையின் உரிமையாளர் வீட்டுக்குச் சென்று (02ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கைப் போரின் இறுதி நிகழ்வுகள் குறித்த தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல் படுத்துவது குறித்த தேசிய செயற்திட்டத்திற்கு இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

செயற்பாடுகளுக்கு ஏற்றவகையில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது, அதற்கு பொறுப்பான நிறுவனங்கள், அவை எடுக்கக் கூடிய முக்கிய நடவடிக்கைகள் மற்றும் அவற்றுக்கான கால அட்டவணை ஆகியவை குறித்த விபரங்களை இந்த திட்டம்கொண்டிருக்கிறது.

சர்வதேச மனித நேய விவகாரங்கள், மனித உரிமைகள், காணிகளை மீள வழங்குதல் மற்றும் மீள்குடியேற்றம், நிவாரணங்கள், நல்லிணக்கம் ஆகிய விடயங்களை இந்த திட்டம் உள்ளடக்கியிருக்கும்.

இது தொடர்பாக நேற்று வியாழக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அவர்கள், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் (02ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் ஒலிம்பிக்கை காணவரும் மகிந்தவுக்கு மீண்டும் எதிர்ப்பு!

(லண்டன்)

லண்டனில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டன் வர இருப்பதாக பிரித்தானியாவின் The Independent நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந் நிலையில், அவரது வருகையினை எதிர்த்து Aspen வீதியிலுள்ள Billingsgate மீன் சந்தைக்கு முன்பாக இன்று மாலை 5 மணியிலிருந்து இரவு 9 மணிவரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்டன ஒன்று கூடலில், பிரித்தானியாவின் சகல தமிழ் மக்களையும் கலந்து கொள்ளுமாறு பிரித்தானிய தமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பிரித்தானிய தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, (02ஆம் பக்கம் பார்க்க)

## மின்தடை

(யாழ்ப்பாணம்)

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த இடங்களுக்கு மேலதிகமாக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவப்பீட பிரதேசம், திருநெல்வேலி பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபை பகுதி, ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்கள் தவிர்ந்த யாழ்.குடாநாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் மற்றும் இயக்கச்சி, பளை, மாசார், புதுக்காடு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

மேலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை (02ஆம் பக்கம் பார்க்க)



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்னால் இசற் புள்ளி சர்ச்சை தொடர்பில் நீதி கோரி மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது...

## இந்து சமுத்திரத்தில் பூமி அதிர்வு!

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தில் இலங்கைக்கு தென் மேற்கிலுள்ள மொரிஷியஸ் தீவுக்கு அருகில் நேற்று வியாழக்கிழமை 5.8 ரிச்டர் அளவிலான பூமி அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கைக்கு எந்தவித பாதிப்பும் இல்லையென சுனாமி எச்சரிக்கை நிலையம் தெரிவித்துள்ளது.

20.5 மைல் ஆழத்தில் கடலுக்கு அடியில் இப் பூமி அதிர்வு ஏற்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ந-8)

## அமைச்சர் ரிசாட் 5ஆம் திகதி ஆஜராகு!

### மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு

(கொழும்பு)

மன்னார் நீதவானுக்கு அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் நீதிமன்றில் ஆஜராகுமாறு அமைச்சர் ரிசாத் பதியூதீனுக்கு மேல் முறையீட்டு நீதிமன்றம் நேற்று 26ஆம் திகதி உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளிக்கும் முகமாகவே அவர் நீதி மன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாஜிஸ்திரேட் நீதவானுக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக அமைச்சர் ரிசாட் பதியூதீன் மீது குற்றம்சாட்டும் வழக்கு ஒன்றை ஏழு மூத்த சட்டத்தரணிகள் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த (02ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ சிவாஜிலிங்கம் பொலிஸாரால் கைது!

(கரவெட்டி)

ரெலோ அமைப்பின் அரசியல் பொறுப்பாளரும், த.தே.கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்டவர்களையும், படுகொலைச் சம்பவத்தையும் நினைவு கொள்ளும் வகையில் சிவாஜிலிங்கம் சுவர் ஒட்டிகளை நெல்லியடிப்பகுதியில் ஒட்டிக்கொண்டிருந்துள்ளார்.

இதன்போது அங்கு வந்த பொலிஸார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அங்கீகாரத்தையும் வழங்காமல் கடுமையான முறையில் (02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதி யுத்த விசாரணைக்...

2009ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட யுத்தத்தின் போது குற்றச் செயல்கள் இடம் பெறவில்லை என முதலில் தெரிவித்த அரசாங்கம், பின்னர் விசாரணைகளை நடத்த ஒப்புக் கொண்டது.

மனிதவுரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் அரசாங்கம் தேசிய செயற்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

மேலும் மனிதவுரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு இந்த யோசனைத் திட்டத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதாகவும் இலங்கை மீது குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## ஆனைக்குழுவின் பரி...

285ஆக வகைப்படுத்தப்பட்டதாகவும் அவற்றில் பலவற்றை தாம் ஏற்கெனவே அமுல்படுத்தி விட்டதாகவும் குறிப்பிட்டார்.

அதேவேளை, போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கக் கூடிய சம்பவங்கள் தொடர்பில், பாதுகாப்புப் படையினர் மத்தியில் தொடர்ச்சியான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல், அதன் தொடர்ச்சியாக தேவைப்பட்டால் குற்றங்களில் சம்மந்தப்பட்டவர்களை தண்டிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். (ந-11)

## ரெலோ...

நடந்து கொண்டுள்ளனர்.

இதனை நகரப்பகுதியில் நின்றிருந்த சிலர் பார்த்துள்ளனர். இதன் பின்னர் சிவாஜிலிங்கத்தையும் அவருடன் இருந்த 8 பேரையும் பொலிஸார் கைது செய்து இரவு 9 மணியளவில் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

அவர்கள் நள்ளிரவு நேற்று இரவு வரை பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பாதுகாப்புடன் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ந-24)

## அமைச்சர்...

வழக்கை விசாரித்த போதே மேல் முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்துள்ளது.

இதன்படி எதிர்வரும் செம்டம்பர் 5ஆம் திகதி அமைச்சர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவு விடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த வழக்கை தாக்கல் செய்த சட்டத்தரணிகளில் குடும்பத்தினருக்கு எந்தவிதமான அச்சுத்தல்களையும் விடுக்கக் குடாது என்றும் அவ்வாறு ஏதாவது முறைப்பாடு கிடைத்தால் வழக்கு முடிபடையும் வரை அமைச்சர் விளக்கமறியலில் இருக்க நேரிடும் என்றும் நீதிமன்ற உத்தரவில் கூறப்பட்டுள்ளதாக அந்த வழக்கைத் தாக்கல் செய்த சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-11)

## ஒலிம்பிக்...

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் நாளைய (இன்று) ஆரம்ப நிகழ்வுகளில் ஏராளமான நாடுகளின் சுமார் 150 உலகத் தலைவர்கள், ஆயிரக்கணக்கான ராஜதந்திரிகள் மற்றும் பிரதானிகள் ஆரம்ப விழாவுக்கு செல்ல இருப்பதால் தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-11)

## கடையை...

காலையில் வந்து பார்த்த வேலையில் கடை உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளதை கண்டுள்ளார்.

அதிர்ச்சி அடைந்த அவர் இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

## கனடா...

வந்திருந்தார்.

இதேவேளை இவர் மீதான கைது நடவடிக்கை ஏன் இடம்பெற்றது என தமக்குத் தெரியாதென குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (ந-24)

## மின்தடை...

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த இடங்களுக்கு மேலதிகமாக காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவப்பீட பிரதேசம், திருநெல்வேலி பிரதேசம், யாழ். நகரம் முழுவதும் மற்றும் இயக்கச்சி, பளை, மாசார், புதுக்காடு, மருதங்கேணி, உசன், மிருசுவில், மந்துவில்; மீசாலை, வடக்கு மிருசுவில், நாவற்காடு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (ஏற்கனவே அறிவிக்கப்பட்ட செய்தி 04 ஆம் பக்கத்தில் உள்ளது.) (ந-8)


### கண்டெடுக்கப்பட்டது

K.K.S வீதி தட்டாதெரு சந்திக்கு அண்மையில் சிறு தொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவற விட்டவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி ஓம் கணபதி புத்தகசாலை, 887, K.K.S வீதி, தட்டாதெரு சந்தி எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (094)

### வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி பகுதியில்
இரண்டு பரப்பில் அமைந்த வீடு
விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0776181216 (083)

### சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

City &Guilds இன் கற்கை நெறிகள்
UK Border Agency ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட
City& Guilds
A1-Exam (திருமணம் செய்து UK செல்வதற்கான)
B1-Exam (Student Visa மூலம் UK செல்வதற்கான)
Rs. 6000 only

IELTS 50% off on Total Course fee

veta Spoken English

SMS YOUR NAME & ADDRESS TO 777 577 333 & GET SCHOLARSHIP

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V. வீதி, Tel.: 021-2262470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-2270243 |
| சுன்னாகம் | K K S வீதி, NSB வங்கி அருகில். Tel.:021-224 1970 |

### உலகம் முழுவதும் 29 நாடுகளின்
300க்கும் மேற்பட்ட பல்கலைகழக வலைப்பின்னலைக் கொண்டுள்ள

INTI
INTERNATIONAL UNIVERSITY
LAUREATE INTERNATIONAL UNIVERSITIES

வழங்கும்

UK, Australia, Canada, America
பல்கலைக்கழக கற்கைநெறி அனுமதிகள்

UNIVERSITY OF BRADFORD MAKING KNOWLEDGE WORK
University of Hertfordshire UH
THE UNIVERSITY OF WOLLONGONG AUSTRALIA
BlueMountains




வெளிநாட்டுப் பல்கலைக்கழகக் கல்வியில் நாட்டமிருந்தும் புதிய விதிமுறைகள், கட்டுப்பாடுகளால் தடுமாறுவோருக்கு
முற்றிலும் உத்தரவாதமான புதிய வழிமுறைகள்

பெருந்தொகைப் பணச் செலவு
IELTS
வங்கிப்பணம்
தூதரக நேர்முகத்தேர்வு
இல்லை

ஏற்கனவே அனுமதி பெற்று ஒகஸ்டில் செல்லவுள்ள மாணவர்களுடன்,
INTI International University பிரதிநிதி
Tan Huey Kuan ஐச் சந்தித்து அனுமதி பெறுங்கள்

விளக்கக் கருத்தரங்கு
& SPOT ADMISSION

@ ஞானம்ஸ் ஹொட்டேல், யாழ்ப்பாணம்

on 29-07-2012 ஞாயிற்றுக்கிழமை முறகல் 10.00 மணி

MEDIA
சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
Mail: edusikaram@gmail.com Web: www.sikaram.lk


### மரண அறிவித்தல்

## கந்தையா சிவராசா



இணுவிலைப் பிறப்பிடமாகவும் Jupiter Strasse, CH - 3015 Bern, Switzerlandஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சிவராசா கடந்த 24.07.2012 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட காலம்சென்ற கந்தையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலம் சென்ற நடராசா அழகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் பாசமிகு கணவரும் முகுந்தன் (சுவிஸ்), முகுந்தறூபினி (சுவிஸ்), பென்சிவா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரற்ரியானா (சுவிஸ்), ரஜீவன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பரமேஸ்வரி (அமரர்), இராஜேஸ்வரி, நடராசா (அமரர்), இளையதம்பி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கந்தையா (அமரர்), ஐயாத்துரை (அமரர்), யோகேஸ்வரி (அமரர்), தவராணி (அமரர்), சிவலிங்கம், வேலாயுதபிள்ளை, ஸ்ரீபதி, சிவதேவி, இரஞ்சிதமலர், ஸ்ரீகரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 27.07.2012 வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்: குடும்பத்தினர் (099)

### கண்ணீர் அஞ்சலி

## திருமதி பேரம்பலம் மாணிக்கம் (ESP)



அறிவில், ஆற்றலில், பாசத்தில்,
சிறந்த உள்ளத்தில், உயர்ந்து
பார் போற்ற வாழ்ந்த
எங்கள் தெய்வத்தின் நினைவாக
ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்

E S பேரம்பலம் & Co,
கஜமுகன் ஹாட் வெயார்,
E S P நாகரத்தினம் & Co
யாழ்ப்பாணம்
E S P நாகரத்தினம் & Co
கிளிநொச்சி
SPN மோட்டோஸ்
ஊழியர்கள்
(C-629)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### நமது நிழல்

ஒருவன் இருந்தான். அவனுக்கு மிகவும் தாராளமான மனம். சற்று வசதி படைத்தவன். அயலவர்களுக்கு தன்னாலான உதவிகள் அனைத்தையும் செய்வான். ஆனால், அவனது மனைவி இதற்கு நேர்மாறான குணம். மகா கருமி! அதுமட்டுமல்ல... தன்னுடைய கணவனையும் ஏனையவர்களுக்கு உதவ விடமாட்டார் அந்த அம்மா.

அந்த மனிதன் ஏனையவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என நினைத்தால் கூட தன்னுடைய மனைவிக்கு தெரியாமலே செய்யத்தான் பார்ப்பார்.

என்ன செய்வது? இப்படி ஒரு கணவன்–மனைவி. ஒற்றுமையான குடும்ப உறவு. இப்படியாக நாட்கள் சென்றன.

ஒருநாள் அந்த அம்மா பிறந்த வீட்டுக்குப் போக வேண்டி இருந்தது. நடந்தே போவோம் என அந்த அம்மா சொன்னார்.

அது ஒரு கடுமையான கோடை காலம்... சரியான உச்சி வெயில்... அந்த வெயிலின் கொடுமையிலே இருவரும் நடந்தே பயணத்தை ஆரம்பித்தார்கள். அந்த அம்மா காலிலே செருப்பு இல்லை. வெறும் காலுடன் நடக்கிறார்.

செருப்பு போட்டுக்கொண்டு நடந்தால் தேய்ந்து விடும் என்பதாலோ என்னவோ... தெரியவில்லை... அதை போடாமல் நடக்கிறார்.

அவர்கள் போகும் பாதை வழியாக எதுவித மரங்களும் இல்லை. காலின் சூடு வேறு... கொடுமை நிறைந்த வெயில் அனல்... இதே உடம்பின் சூடு வெப்பம் அதிகம்... என்ன செய்வது... என்று தெரியாமல் அங்கலாய்ப்பு. மனைவியின் தவிப்பை கணவன் பார்க்கிறான்.

ஏன் இப்படியாகத் தவிக்கிறாய்... உனக்குத்தான் உடம்பு மிகவும் பெரிது... உன் உடம்பின் நிழல் பூமியிலே விழும்போது அந்த நிழலின் மேலே சிறிதுநேரம் நின்றால் உன்னுடைய கால் சூட்டைத் தணித்துக் கொள்ளலாம்– என அறிவுரை வழங்கினார்.

அந்த அம்மாவுக்கு கோபம் மேலோங்கியது... "என்ன உளர்றீங்கள்? எனது நிழலில் நானே எப்படி நிற்க முடியும்?" என்று அதட்டலாகக் கேட்டார்.

அப்போது கணவன் சொன்னார்; "இப்போது சற்று சிந்தித்துப் பார்; உனது நிழலே உனக்கு உதவவில்லையென்றால்; நீ பெட்டியிலே பூட்டி வைத்திருக்கும் பணம் பிற்காலத்தில் உனக்கு உதவப் போகிறதா?" என்றார்.

அந்த அம்மாவுக்கு புத்தியிலே ஒரு தெளிவு ஏற்பட்டது. மகான்களுக்கெல்லாம் மரத்தின் நிழலே ஞானம் வருகிறது... இந்த அம்மாவுக்கு உச்சி வெயிலே ஞானம் பிறக்கிறது. இதைக் கேட்டதும் நமக்கு இன்னொரு கதை ஞாபகத்துக்கு வந்தது.

ஒரு பெரிய செல்வந்தன். நிறைய சொத்து... அவன் பயங்கர கருமி... பணம் சேர்க்கத் தெரியுமே தவிர செலவு செய்யத் தெரியாது. அவனுக்கு மூன்று பிள்ளைகள். அந்த மூன்று பேரும் தன்னைப் போலவே கருமியாக இருக்க வேண்டுமென ஆசைப்பட்டான்.

அவனுக்கு கடைசி காலம் நெருங்கிவிட்டது... சாகக்கிடக்கிறான்... மூத்த பிள்ளையை அழைத்தான்.

"நான் இறந்து போனால், என்னை நீ எப்படி அடக்கம் செய்வாய்" என்று கேட்டான்.

"உனக்கு சந்தனப் பலகையாலே ஒரு பெட்டி செய்வேன்... அதிலே உன்னை வைத்து... பட்டுத் துணியாலே மூடுவேன்... கௌரவமாகக் கொண்டு போய் அடக்கம் செய்வேன்" என்றான்.

தந்தை உடனே "பளீரென" அறைந்தார். அவனை "என்னுடைய பிள்ளையாடா நீ... சந்தன மரமும் பட்டுத்துணியும் எவ்வளவு செலவாகும்... ஊதாரியாகப் போய் விடுவாய் போல் இருக்கிறது" என்றார்.

தனது இரண்டாவது பிள்ளையை அழைத்து அதே கேள்வியைக் கேட்டார். அண்ணன் அறை வாங்கியதைப் பார்த்து விட் டான் இல்லையா... அதனாலே அவதானமாகப் பதிலளித்தான்.

"நான் உனக்கு கள்ளிப் பலகையிலே பெட்டி செய்வேன்... துணி எதுவும் போடமாட்டேன். பின்னர் கொண்டு போய் அடக்கம் செய்வேன்" என்றான்.

அவனையும் "பளார்" என தந்தை அறைந்தார். "கள்ளிப் பலகை மட்டும் என்ன சும்மாவா கிடைக்கும்? பணம் கொடுத்துத்தானே பெற முடியும்" என்றார்.

கடைசியாக மூன்றாவது மகனை அழைத்து; "நீ எப்படியடா என்னை அடக்கம் செய்வாய்?" என்று கேட்டார்.

"நான் உங்களுக்காக காசு செலவு செய்யமாட்டேன். உங்களை வைத்து பிழைத்துக் கொள்ள வழி ஏற்பாடு செய்வேன்" என்றான்.

"அது எப்படி முடியும்?" எனத் தந்தை வினவினார்.

"உங்களைத் துண்டு போட்டு, கூடையில் அடுக்கி, தெருத் தெருவாக ஆட்டு வத்தல் என்று கூவி, விற்று பணம் சம்பாதிப்பேன்" என்றான்.

"நீ தான் எனது பிள்ளை!" என்று வாரி முத்தமிட்டார் தந்தை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இசட் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர் விபரம் திரட்டப்படுகிறது

## உயர்கல்வி அமைச்சு தகவல்

(கொழும்பு)

புதிய இசட் புள்ளி வெளியிடப்பட்டதன் பின் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் குறித்து தகவல் திரட்டப்பட்டு வருவதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

விரைவில் அத் தகவல்களைப் பெற்று அறிக்கை தயாரிக்கவுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

முதலில் வெளியிடப்பட்ட 2011 (உ/த) பெறுபேற்றில் பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் சிலர் புதிய இசட் புள்ளி வெளியிடப்பட்டதன் பின் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை, புதிய இசட் புள்ளி வெளியிடப்பட்டதன் பின் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கவென அடுத்த மாதம் 8 ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

இசட் புள்ளியில் மாற்றம்ஏற்பட்டுள்ளமுன்னைய விண்ணப்பதாரிகளுக்கு தங்கள் தெரிவு செய்த துறைகளில் மாற்றம் செய்ய வேண்டுமாயின் அதற்கான வாய்ப்புக்களும் உள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறியுள்ளது. (அ–2)

# விசுவமடு மத்திய நூலகத்தை இயங்க வைக்க கோரிக்கை

(இராமநாதபுரம்)

விசுவமடுப் பகுதியில் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயங்கி வந்த விசுவமடு மத்திய நூலகம் தற்போது இயங்காமல் செயலிழந்து காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்நூலகமானது தற்போது பற்றைக்காடுகள் படர்ந்து எதுவித செயற்பாடுகள் இன்றி உள்ளது. யுத்த சூழ்நிலைக்கு முன்னர் இந்நூலகத்தினால் விசுவமடு, புன்னை நீராவி, பிரமந்தனாறு, றெட்பானா, உடையார்கட்டு, தருமபுரம், கண்டாவளை ஆகிய இடங்களில் உள்ள மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலதரப்பினர் பயனடைந்தனர்.

இந்நூலகத்தினை மீளச் செயற்படுத்துவதன்மூலம் மாணவர்கள் தமது அறிவுத் தேவையினைப் பூர்த்தி செய்து கொள்ளலாமென பெற்றோரால் தெரிவிக்கப்படுகின்றது. மக்கள் தற்போது விசுவமடு பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த நிலையில் இந்நூலகத்தினை மீள இயங்க வைப்பதற்கு அரசாங்க அதிகாரிகளோ அரச சார்பற்ற நிறுவனங்களோ முயற்சி எடுக்கவில்லையென பிரதேசவாசிகளால் கவலை தெரிவிக்கப்படுகிறது. எனவே, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்டதாக விசுவமடு மத்திய நூலகம் அமைவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வெகுவிரைவில் இயங்க வைப்பதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ–2–269)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 60 | 60 |
| தக்காளி | 140 | 100 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 40 |
| கோவா | -- | 60 | 50 | 70 |
| கரட் | 100 | 100 | 100 | 140 |
| பூசணி | 60 | 40 | 50 | 60 |
| புடோல் | 30 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 60 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 90 | 80 |
| பாகற்காய் | 100 | 80 | 70 | 70 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 120 | -- | -- |
| பயற்றங்காய் | 100 | 70 | 100 | 60 |
| லீக்ஸ் | 130 | 120 | 110 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 80 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 50-80 | 120 | 100 | 80 |
| போஞ்சி | -- | 110 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 40 | 50 | -- |
| கீரை – 1 பிடி | 8-10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 25 | 18-20 |

## இராசி பலன்

27.07.2012
(ஆடி 12, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
நவமி முன்னிரவு 9.52 மணிவரை
சுவாதி காலை 7.22 மணிவரை
விசாகம் பின்னிரவு 5.45 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
வரலட்சுமி பூசை.

**மேடம்** வாழ்க்கைத்துணை வழியே மகிழ்ச்சிக்குரிய செய்தியொன்று வந்து சேரலாம், வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும், போசன சுகமுண்டு.

**இடபம்** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் ஏற்படும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொலைபேசி வழித் தகவலால் மகிழ்ச்சியடைவீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றி உற்சாகம் பிறக்கும்.

**மிதுனம்** மாமன், மைத்துனர் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரும், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**கடகம்** பெற்றோரின் பாச மழையில் நனையும் நாள், ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், தொல்லை கொடுத்த சிலரே தோள்கொடுத்து உதவ முன்வருவர்.

**சிங்கம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவர், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள்.

**கன்னி** இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்போடு தொழிலில் வளர்ச்சி காண்பீர்கள், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பக்க பலமாக நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எடுத்த காரியங்களில் அதிகம் பாடுபடுவீர்கள்.

**விருச்சிகம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் வளர்ச்சி கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழ்வீர்கள், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், பொருட் சேர்க்கையுண்டு.

**தனுசு** பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், பெண் வழி பிரச்சினைகள் அகலும், பொருளாதார நிலை உயர்வடையும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**மகரம்** அதிகாரத்துடன் செயற்படுவீர்கள், தொழிலை விருத்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புகள் அதிகரிக்கும் நாள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**கும்பம்** திடீர் பயணங்களால் நன்மையுண்டு, ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், பக்கபலமாக நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், வீண் பழிகள் அகலும்.

**மீனம்** எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, பயணங்களால் பயமுண்டு, ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படலாம், காரியங்களில் தாமதமேற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலத்தானை பொது மயான விவகாரம்; மக்கள் போராட்டம்

## வேலைகளை இடைநிறுத்தியது வல்வெட்டித்துறை நகரசபை


(கரவெட்டி)

வல்வெட்டித்துறை மயிலத்தானை பொது மயானத்தை நில அபகரிப்பு செய்தமைக்கு எதிராக அம்மயானத்தை பயன்படுத்தி வந்த மக்கள் சிலர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

வல்வெட்டித்துறை நகர சபை தலைவர் அ.அனந்தராஜிற்கு எதிராகவும் சுலோக அட்டைகளை தாங்கி இவ்வார்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதுமட்டுமன்றி இம்மயானத்தின் முன் பக்க மதில் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமது பொது மயானத்தின் நிலத்தை நகர சபை அபகரிப்பதாகவும் சுட்டிக்காட்டினர்.

சம்பவ இடத்திற்கு வந்த நகர சபைத் தலைவர் மக்களின் அபிலாசை அடங்கிய கடிதத்தினை கோரியதுடன் அவ்வேலைத் திட்டத்தை இடை நிறுத்துவதாகவும் உறுதியளித்தார்.



ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தமது சுலோக அட்டைகளில் புதைகுழி களைத் தோண்டும் வல்லை நகர சபை நரியே!,, வேண்டாம் வேண்டாம் மயான ஆக்கிரமிப்பு வேண்டாம், மயான நில ஆக்கிரமிப்பா? அல்லது சூறையாடலா?, வீட்டிற்கொரு நீதி, மயானத்திற்கு ஒரு நீதியா?, இறந்த பின்பும் நிம்மதியற்ற இறுதிப் பயணம், மயான ஆக்கிரமிப்பு ஒரு பதவி ஆசையா? போன்ற வாசகங்களை தாங்கியவாறு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். (அ-3-24)

## வீதிகள் திறக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

கடைகளை நகர்த்துவதற்காக யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியின் சத்திர சந்தியில் இருந்து சிவன் கோவில் சந்தி வரை மூடப்பட்டிருந்த வீதி மக்கள் போக்குவரத்திற்காக மீண்டும் நேற்று முன்தினம் முதல் திறந்து விடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ-9)




## தொலைந்த ஆவணங்களை மீண்டும் கோருகின்றது அரச திணைக்களம்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் உள்ள அரச திணைக்களம் ஒன்றில் உத்தியோகத்தர், ஊழியர்களது சுயவிபரக் கோவையில் சில ஆவணங்கள் இல்லாதிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, அவ் ஆவணங்களை ஒப்படைக்குமாறு உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆவணங்கள் ஒப்படைக்கப்படாவிடின் இம்மாத வேதனம் இடைநிறுத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஊழியர் ஒருவர் தெரிவிக்கையில்,

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பு சில ஆவணங்கள் தவறியிருப்பதாக தெரிவிக்கப்பட்டு அவ் ஆவணங்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டதாகவும் மீண்டும் இம்முறையும் ஆவணங்கள் திரும்பக் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் கோரப்படும் சில ஆவணங்களை தற்போது பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளது.

குறிப்பாக இறந்த மனைவியின் தேசிய அடையாள அட்டையின் புகைப்பட பிரதி கோரப்பட்டுள்ளது. இறந்தவரது தேசிய அடையாள அட்டை கிராம சேவகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனால் அவ் அடையாள அட்டையைப் பெறுவது எப்படி? எனவே இவற்றை பெற்றுக்கொள்வதில் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (அ-3-29)

## கோரிக்கை விடுக்கப்பட்டும் புனரமைக்கப்படாத வீதிகள்

(சாவகச்சேரி)

கண்டுவில் முதலாம் ஒழுங்கை மற்றும் கண்டுவில் வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாது போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளது.

அதிலும் ஏ9 வீதியில் இருந்து டச்சு வீதிக்கு செல்லும் கண்டுவில் வீதி பெரும் குழிகளைக் கொண்டுள்ளதனால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அவல நிலை உள்ளது.

இவ்வீதியானது நீண்டகாலமாக மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டும் புனரமைக்கப்படாதுள்ளது.

இனிவரும் காலம் மழை காலம் என்பதால் இவ்வீதியில் உள்ள குழிகளில் மழைநீர் தேங்கிநின்று போக்குவரத்தை மேற்கொள்ளும் மாணவர்கள் உட்பட பொதுமக்களது உடைகளை அழுக்காக்கும்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு இவ்வீதிப் புனரமைப்பை துரிதப்படுத்த ஆவன செய்யுமாறு மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய்,இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், யாழ்.பிரதான வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கச்சேரி வரையான பிரதேசம், மருதனார்மடத்தின் ஒரு பகுதி, இணுவில், கோண்டாவிலின் ஒருபகுதி, குளப்பிட்டி, கொக்குவில்,நாச்சிமார் கோவிலடி,தட்டாதெரு பிரதேசம், கோம்பயன் மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, பாசையூர், கொழும்புத்துறை, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சங்கானை, நெல்லண்டை, பருத்தித்துறை, புனிதநகர், கற்கோவளம், உபயகதிர்காமம்,வல்லிபுரக்குறிச்சி, அம்பன்,குடத்தனை, மணற்காடு, நாகர்கோயில் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## வழக்குகள் ஒத்திவைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்றத்தில் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதிமன்ற சம்பவத்தை அடுத்து சட்டத்தரணிகள் மேற்கொண்ட பணிப் புறக்கணிப்பினால் அன்றைய தினம் நடைபெறவிருந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவ்வழக்குகளே மேற்குறித்த திகதியில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (அ-3-29)

## தேசிய மட்டத்தில் முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

யா/ அருணோதயாக் கல்லூரி மாணவி தேவதாசன் உமையாழினி குறுநாடகப் பிரதியாக்கம் பிரிவு 4 இல் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த்தின கட்டுரையாக்கப் போட்டியில் பிரிவு 3 இல் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றிருந்தார் என கல்லூரி அதிபர் என். கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-9)

## தேசிய அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கோணகஹா முல பலாபத்வெலவைச் சேர்ந்த அழகுபெருமாள் மனோஜ்குமார் (951842800V) என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலகநேரத்தில் வந்து தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம். (அ-9)

## கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெண்கலப்பதக்கம்




(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட இவ்வாண்டுக்கான தேசிய கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் கனிஷ்ட பிரிவினருக்கான போட்டிப் பரீட்சையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இரு மாணவர்கள் வெண்கலப் பதக்கத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

தரம் 6, 7 மாணவர்களுக்கான இப்பரீட்சையில் இளங்கோ இளங்கீதன், அருளானந்தம் அபிநந்தன் ஆகிய இருவருமே வெண்கலப்பதக்கத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கான பதக்கத்தினைப் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கிக் கௌரவித்தார்.

ஒன்பதாவது சர்வதேச கணித- விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தின் லக்னோ நகரில் நடைபெறவுள்ளது.

இவ்விரு மாணவர்களுக்கும் கல்வி அமைச்சினால் நடத்தப்படும் வதிவிடப் பயிற்சி நெறி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரையும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையும் குருதெனிய கல்வி வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (அ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சை பணிக்குழுவினருக்கான செயலமர்வு கடந்த 23 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா தலைமையுரை யாற்றுவதையும் பிரதிப் பரீட்சை ஆணையாளர் அ.சொலமன் செயலமர்வு நடத்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## எழுத்தாணி சஞ்சிகை வெளியீடு இன்று

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் நான்காம் அணி இரண்டாம் வருட மாண வர்களின் பயிற்சி இதழான எழுத்தாணி சஞ்சிகை வெளியீடு இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊடகவளங் கள் மற்றும் பயிற்சி மையத்தில் இடம் பெறவுள்ளது.

இம்மையத்தின் இயக்குநர் தே. தேவா னந்த் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கழைலக்கழக கலைப்பீடாதிபதி பேரா சிரியர் வி.பி. சிவநாதன், சிறப்பு விருந்தி னராக சுவீடன் நாட்டு ஊடக நிறுவனமான போயோ நிறுவனத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திருமதி பிஃயோனா பார்டன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது மாணவர்களின் ஆக்கத்தில் உருவான எட்டு எழுத்தாணி சஞ்சிகைகள் வெளியிடப்படவுள்ளன என் பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இலங்கையில் படுகொலை; அமெரிக்காவில் கருத்தாடல்

இலங்கைத்தீவில் ஈழத் தமிழினத்தின் மீது நடந்தேறிய இனப்படுகொலை தொடர் பிலான கருத்தாடல் நிகழ்வொன்று அமெரிக் காவில் இடம்பெற்றுள்ளது.

பொஸ்ரன் பகுதியில் இடம்பெற்றிருந்த இக்கருத்தாடல் களத்தில் தமிழகத்தில் இரு ந்து பேராசிரியர் மணிவண்ணன், கனடாவில் இருந்து பேராசிரியர் சேரன் உட்பட அமெ ரிக்காவைச் சேர்ந்த வழக்கறிஞர் டாக்டர் மரியா உட்பட பல வள அறிஞர்கள் பங் கெடுத்திருந்தனர்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரத மர் வி. உருத்திரகுமாரன் இக்கருத்தாடலை நெறிப்படுத்தினார்.

இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு எதிராக நடந்தேறிய போர்க்குற்றங்கள், மானிடத் துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படு கொலையை மையமிட்டு இலங்கையில் சர்வ தேசத்தின் தலையீடு இக்கருத்தாடலின் மையப் பேசுபொருளாக அமைந்திருந்தது. (அ-2)

## ஊடக பட்ட கற்கைநெறி ஆரம்ப விழா இன்று

(யாழ்ப்பாணம்)

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் பாரதி யார் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்று ஆரம்பிக்கின்ற ஊடக பட்ட கற்கை நெறிகளுக்கான ஆரம்பவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இல 981, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிசப் சவுந்தரம் மீடியா சென்ரில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை, சிறப்பு விருந்தினராக யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருள்கலாநிதி ஜஸ் ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பி.எஸ்.சி., எம்.ஏ ஊடக பட்டப்படிப்புக ளுக்கான பதிவுகளை மேற்கொண்டோர் இந்நிகழ்வில் கலந்து பாட கைநூலைப் பெற்றுச்செல்லுமாறு பிசப் சவுந்தரம் மீடியா சென்ரல் நிறுவன இயக்குனர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தெரி வித்துள்ளார்.

மேற்படி பட்ட கற்றை நெறிகளில் புதிதாக சேர விரும்புவோரும் செய்தியாளர்களும் ஊடக ஆர்வலர்களும் மேற்படி விழாவில் கலந்து கொள்ள முடியும். (அ-9)

## வவுனியா மாணவர்கள் ம.உ.ஆ.வில் முறைப்பாடு

(பூந்தோட்டம்)

புதிதாக வெளியிடப்பட்ட இசட்புள்ளி கள் இரண்டாம் தரமாக பரீட்சையில் தோற் றியவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள தாக தெரிவித்தும் இப்புள்ளிவிபரங்களை மறுபரிசீலனை செய்யுமாறும் கோரி வவு னியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் 32 மாணவர்கள் தனித் தனியாக முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று மதியம் 12 மணியளவில் வவு னியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு சென்ற மாணவர்கள் அங்குள்ள உத்தியோகத்தரிடம் இம் முறைப்பாடுகளை கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்து மனித உரிமை ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் அவர்களது முறைப்பாடுகளை ஏற்று அதற் கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள் ளனர் என தெரிய வருகின்றது. (அ-2-266)

## விபச்சார விடுதி முற்றுகை; தாய்லாந்து பெண்கள் கைது

நாரஹென்பிட்டி பகுதியில் செயற்பட்டு வந்த விபச்சார விடுதி ஒன்றைத்திட்டமிட்ட குற்றம் மற்றும் மோசடி தடுப்புப்பிரிவினர் முற்றுகையிட்டுள்ளனர்.

இந்த விபச்சார விடுதி நேற்றுமுன் தினம் முற்றுகையிடப்பட்டதாக நாரஹென் பிட்டி பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த விபச்சார விடுதியைச் செயற் படுத்திய இருவரும் அதில் விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டு வந்த தாய்லாந்து பெண்கள் இருவரும் கைது செய்யப்பட் டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நாரஹென்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளதோடு நீதிமன்றில் ஆஜர் செய்யப் படவுள்ளனர். (அ-2)

## வவுனியாவில் 'முதல் அடி' திரைப்பட படப்பிடிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியாவில் முதல் அடி என்ற பெயரில் முழு நீளத்திரைப்படம் ஒன்றை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தமிழ் திரைக்கலை மன்றம் இதற்கான ஆரம்ப கட்ட வேலைகளைஆரம்பித்துள்ளது.

முதல் அடி முழு நீளத்திரைப்படத்திற்கான படப்பூசையும் மன்றத்தின் புதிய அலுவலகத் திறப்பு விழாவும் அண்மையில் வவுனியா நெளுக்குளத்தில் நடைபெற்றது. நெளுக்கு ளம் காத்தான்கோட்டம் ஸ்ரீ முத்துமாரி அம் மன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழி பாடுகளைத் தொடர்ந்து விருந்தினர் வரவேற் கப்பட்டதுடன் மன்றத்திற்கான புதிய அலுவலக மும் திறந்து வைக்கப்பட்டது.வவுனியாவைச் சேர்ந்த கே. எஸ்.பி மோகனராஜ் என்பவர் இந்த திரைப்படத்திற்கான இயக்குநராக கடமையாற்றுகிறார்.

வவுனியாவை அடிப்படையாக வைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி படப்பிடிப்பு வெற்றிபெற வர்த்தகர்கள் மற்றும் கொடை யாளிகள் தம்மால் இயன்ற பங்களிப்பினை வழங்குவதற்கு முன்வரல் வேண்டும் என்று படத்தின் இயக்குநர் கோரிக்கை விடுத்துள் ளார். (அ-2-266)

## உயர்கல்வி அமைச்சர் நாமல் ராஜபக்ஷ?

### விராஜ் எம்.பி.வலியுறுத்து

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷவை புதிய உயர்கல்வி அமைச்சராக நியமிக்கவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக்கூறியுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ அமைச்சர் பதவியை வகிக்காதபோதிலும் உயர்கல்வி துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்க்க குரல் கொடுத்து வருவதாகவும் அவர் கூறியுள் ளார். அதேவேளை நீதிமன்ற உத்தரவின் படி புதிய இசட் புள்ளி கணக்கிடும் முறை யை நாட்டுக்கு வெளியிடவேண்டும் என வும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


## மணமகள் தேவை கல்யாண மாலை மணமகன் தேவை

பிறப்பு:- 1985 இந்து வேளாளர்.
நட்சத்திரம்:-பூரட்டாதி 3
உயரம்: 5'8"
கி.பா:-63.5, செவ், 7 இல் சூரி
தொழில்:- படப்பிடிப்பாளர்
B/157

பிறப்பு:- 1982 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-கேட்டை 2
உயரம்: 5'5"
கி.பா:-7.75
தொழில்:-முகாமையாளரும் சாரதியும்
B/146

பிறப்பு:- 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-சதயம் 1
உயரம்: 5'4"
கி.பா:-22.5, 12 இல் செவ்,சூரி
தொழில்:- B.com, அரச முகாமைத்துவ உதவியாளர்
G/154

பிறப்பு:- 1986 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-ரோகிணி 4
உயரம்: 5'5"
கி.பா:-73, 7 இல் செவ்
தொழில்:- B.sc Bio Technicion Trainee
G/164

பிறப்பு:- 1986 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-அனுஷம் 3
உயரம்: 5'8"
கி.பா:-50.75, 7 இல் செவ்
தொழில்:- வாணிபம் (சொந்தமாக)
B/171

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

பிறப்பு:- 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-விசாகம் 4
உயரம்: 5'3"
கி.பா:-8.5
தொழில்:-
G/132

பிறப்பு:- 1982 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-மிருகசீரிடம் 4
உயரம்: 5'6"
கி.பா:-17
தொழில்:-பாரவூர்தி சாரதி
B/195

பிறப்பு:- 1981 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-மூலம் 1
உயரம்: 5'3"
கி.பா:-43
தொழில்:-BA பட்டதாரி
G/194

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சி ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்துள்ளது

## ஐ. தே. க. எம். பி. தயாசிறி குற்றச்சாட்டு

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் தொடர்ந்தும் ஆறு வருடங்கள் ரணில் விக்ரமசிங்கவால் பதவிவகிக்க முடியுமென்ற தீர்மானத்தை விலக்கிக் கொள்ளவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார். இல்லாவிட்டால் அரசில் ரீதியான தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டிய நிலைமை உருவாகுமென்று கூறியுள்ளார்.**

அரசாங்கத்துடன் இணையப் போவதாகவும் அது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியதாகவும் வெளியான செய்திகள் தொடர்பில் கேட்ட போதே ஐ.தே.க. எம்.பி. தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 18 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து ஜனாதிபதி சர்வாதிகார ஆட்சியை நோக்கிச் செல்கிறார். இதனை எமது கட்சியும் கடுமையாக விமர்சிக்கின்றது. அவ்வாறானதோர் நிலையில் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் பதவிக்காக இனி 6 வருடங்களுக்கு தேர்தல் வாக்கெடுப்பு நடத்த வேண்டிய அவசியமில்லையென்றும் அதுவரை தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமைப் பதவியை வகிப்பார் என்றும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது கட்சியிலுள்ள ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்து சர்வாதிகாரத்திற்கு வித்திட்டுள்ளது. எனவே, இத் தீர்மானத்தை விலக்கிக் கொள்ள வேண்டும். ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்க வேண்டும். இல்லாவிட்டால் அரசியல் ரீதியாக தீர்க்கமான தீர்மானமொன்றை மேற்கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்படுவேன்.

இதுவரையில் நான் எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை. அத்தோடு ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினேன் என்ற செய்திகளிலும் உண்மையில்லை. இதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தயாசிறி ஜயசேகர எம்.பி. அரசுடன் இணையப் போவதாக வெளிவந்த செய்திகள் தொடர்பாக ஆராயுமாறு தலைவர் தன்னை பணித்ததாகத் தெரிவித்தார். (அ-2)

# அமெரிக்கா இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பை வரவேற்கின்றேன்

## பற்றீசியா முன் பீரிஸ் புகழாரம்

அமெரிக்கா இலங்கைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்பு வரவேற்கப்பட வேண்டியது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதுவர் பற்றிசீயா புட்டினீஸ் பதவிக்காலம் முடிவடைந்து பிரியாவிடை பெற்றுச் செல்லும் நோக்கில் நடத்திய சந்திப்பின் போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வர்த்தகம், பாதுகாப்பு, குறிப்பாக கடற் பாதுகாப்பு விவகாரங்கள் மற்றும் கல்வித் துறையில் அமெரிக்கா இலங்கைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது. ஜீ.எஸ்.பி. சலுகைத்திட்டத்தை நீட்டிப்பது தொடர்பில் சாதகமான பதில் கிட்டியுள்ளதாகவும் இரு தரப்பு உறவுகளைதொடர்ந்தும்வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதேவேளை வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள நான்கு வைத்தியசாலைகளை புனரமைக்க ஐக்கிய அமெரிக்கா சர்வதேச வைத்திய மற்றும் சுகாதார அமைப்பின் ஊடாக 600 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, கிளிநொச்சி ஆதார வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலை என்பவை இந்நிதியூடாக புனரமைக்கப்படவுள்ளன. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று முன்தினம் 25 ஆம் திகதி மாலை சுகாதார அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயதிலக மற்றும் அமெரிக்க நிறுவன பிரதிநிதிகளுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கை இனப்பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுங்கள்

## பிரணாப்பிற்கு அனுப்பிய வாழ்த்து செய்தியில் சங்கரி கோரிக்கை

இந்திய ஜனாதிபதியாக பிரணாப் முகர்ஜி தெரிவு செய்யப்பட்டுள்ளமை இலங்கை இன பிரச்சினையை விரைவில் தீர்க்கக் கூடிய நடவடிக்கையை எடுக்க நல்ல வாய்ப்பு என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். பிரணாப் முகர்ஜிக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்து செய்தியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய ஜனாதிபதியாக தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமைக்காக தமிழ் பேசும் மக்கள் சார்பிலும் தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பிலும் எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன்.

தாங்கள் கௌரவ நிதி அமைச்சராகவும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சராகவும் பணியாற்றிய காலத்தில் எமது இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வு ஏற்படுத்துவதற்கு இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் போதெல்லாம் விசுவாசமாக உழைத்தீர்கள் என்பதை நாம் அறிவோம்.

ஐயா தற்போது ஆண்டவனாலேயே நல்லதோர் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதி மேதகு மஹிந்த ராஜபக்ஷ தங்களுக்குள்ள நல்லுறவுடன் இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக தங்களுக்குள்ள பரிபூரண அறிவையும் இந்திய மக்களால் நீங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ள பெருமை மிக்க பெரும் பதவியும் சேர்ந்து இலங்கை பிரச்சினையை விரைவாக தீர்க்க கூடிய நடவடிக்கையை எடுக்க நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கையும் இந்தியாவும் சண்டையிடக் கூடாது என மகாத்மா காந்தி அடிகள் அன்றே கூறியிருந்தார்கள். மிக அண்மையில் உள்ளமையால் இரு நாடுகளும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்றுள்ளது.(எ)

# வட்டக்கச்சி பலசரக்கு கடையில் திருட்டு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியிலமைந்துள்ள பல சரக்குக்கடை ஒன்றில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளன. இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியிலமைந் துள்ள பல்பொருள் வாணிபத்திலேயே முன் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு பல பொருட்கள் திருடப்பட்டுள்ளன. கடையினுள் வைக்கப்பட்ட எரிபொருள், அங்கர் மா வகைகள், பீடி, சிகரெட், சோப் வகைகள், கிறீம் வகைகள், மீன்ரின், பிஸ்கட் வகைகள், சோடா வகைகள், தீப்பெட்டி, பற்றரி, தேங்காயெண்ணெய், நூடில்ஸ் வகைகள் உட்பட வேறு பல பொருட்களும் திருடப்பட்டுள்ளன. அத்துடன் 15 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பாக கடை உரிமையாளரினால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


சாதனையாளனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் பரமேஸ்வரன் சேதுராகவன்

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதல் நிலைபெற்று சாதனை நிலைநாட்டி கல்வியமைச்சின் புலமைப்பரிசில் பெற்று ஜப்பான் நாட்டில் புக்கோவா நகரில் நடைபெற்ற 24 ஆவது தெற்காசிய பசுபிக் சிறுவர் மகாநாட்டில் கலந்து சாதனை புரிந்த **செல்வன் பரமேஸ்வரன் சேதுராகவனை** பாராட்டி வாழ்த்துவதுடன் செல்வன் சேதுராகவன் மென்மேலும் பல சாதனைகள் புரிந்து வெற்றி பெற்று உயர்வடைய வேண்டும் என எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
ந.செவ்வேள் (செயலாளர் நகர சபை பருத்தித்துறை)
சு.வசந்தகுமார் (உதவி அரச அதிபர் பூநகரி)
ந.வரதன் (பிரான்ஸ்)
ந.சேந்தன் (கனடா)
ந.ஐங்கரன் (ஆய்வு உத்தியோகத்தர் உள்ளூராட்சி திணைக்களம் மட்டக்களப்பு).

(சி/630)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஏ' தர சித்தி பெற்றவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியில்லை

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

புதிய இசட் புள்ளி கணிப்பீட்டு முறைமை வெளிப்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்ற சில மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அதனைவிட வேறு எவ்வாறு பெறுபேறு எடுப்பது.

மூன்று சீ பெற்றுக் கொண்டவர்கள் பல்கலைக்கழக அனுமதிப் பெற்றுக் கொண்டுள்ளனர். இசட் புள்ளி எவ்வாறு கணிப்பீடு செய்யப்பட்டது என்பது பற்றி நாட்டு மக்களும் அரசியல்வாதிகளும் கல்வியியலாளர்களும் அறிந்து கொள்வது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# துஷ்பிரயோகங்களுக்கு துணைபோகும் விடுதி உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு துணை போகும் விடுதிகள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள், ஊழியர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பான சுற்றறிக்கையொன்றை பிரதேசங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பிரதி பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த சுற்றறிக்கைகளின் உள்ளடக்கங்களின்படி விடுதிகள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள், ஊழியர்கள் தெளிவுபடுத்தப்படவுள்ளனர்.

அந்தத் தெளிவுபடுத்தல்களின் பின்னரும் மேற்படி துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவோருக்கு துணைபோகும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

(அ-2)

# புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வீடு அமைப்பு

## மாதிரி வீடு அமைக்கவும் ஏற்பாடு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மாங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் அமைந்திருக் கும் வளாகத்திற்குள் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கிர வல் மண், கல் மூலம் மாதிரி வீடு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முல்லை. மாவட்ட முகாமையாளர் விஜித கமகே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை இவ் வீட்டுத்திட்டம் அமைக்கப்படவுள்ள அவ் வளாகத்தை மாங்குளம் பிரதேச மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் பங்கு பற்றிய சிரமதான நிகழ்வின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். ஐரோப்பிய நாடுகளில் நடைமுறையில் உள்ள மாதிரி வீடமைப்பை அமைக்க 15 பேச் காணி போதுமனது.

550 சதுர அடியில் ரூபா 4 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இவ்வீடானது இலங்கையிலே முதல்முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிற மாதிரி வீடமைப்பாகும்.

மக்கள் பார்வைக்கு விடப்படும் இவ்வீடானது இலங்கையிலே அமைக்கப்படவுள்ள *ஜனசெவன* 10 இலட்சம் வீட்டுத்திட்டம் உட்பட அனைத்து வீடுகளும் இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அமைக்கப்படவுள்ளது.

இவ்வீடு கட்டி முடிக்கப்பட்டதும் பார்வையிடுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் எனர் பலரும் வருகை தரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-15)

# 2012.07 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★*1214*-பிரான்சில் இடம்பெற்ற போரில் இரண்டாம் பிலிப் இங்கிலாந்தின் ஜோனை வென்றான்.

★*1549*-பிரான்சிஸ் சேவியர் அடிகள் ஜப்பானை அடைந்தார்.

★*1627*-தெற்கு இத்தாலி நகரான சான் செவேரோவை நிலநடுக்கம் தாக்கியது.

★*1794*- புரட்சியின் எதிரிகளாகக் கருதப்பட்ட 17 ஆயிரம் பேரைத் தூக்கிலிட ஆதரித்தமைக்காக மாக்சிமிலியன் ரோப்ஸ்பியர் கைது செய்யப்பட்டார்.

★*1862*-சான் பிரான்சிஸ்கோவில் இருந்து பனாமா நோக்கிச் சென்று கொண்டிருந்த கோல்டன் கேட் என்ற கப்பல் மெக்சிக்கோவில் தீப்பிடித்து மூழ்கியதில் 231 பேர் உயிரிழந்தனர்.

★*1865*-வெல்சிய குடியேறிகள் ஆர்ஜெண்டினாவின் arrive in Argentina at சூபூட் பள்ளத்தாக்கை அடைந்தனர்.

★*1880*-இரண்டாவது ஆங்கில- ஆப்கானியப் போர்: மாய்வாண்ட் என்ற இடத்தில் ஆப்கானியப் படைகள், பிரித்தானியரை வென்றன.

★*1921*-பிரெட்றிக் பாண்டிங் தலைமையில் ரொரண்டோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களினால் இன்சுலின் கண்டறியப்பட்டது.

★*1929*-மூன்றாவது ஜெனீவா உடன்படிக்கை.

★*1941*-ஜப்பானியர்கள் பிரெஞ்சு இந்தோ-சீனாவைக் கைப்பற்றினர்.

★*1953*- ஐக்கிய அமெரிக்கா, சீனா மற்றும் வடகொரியா ஆகியவற்றுக்கிடையில் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. தென்கொரியா இவ்வொப்பந் தத்தில் கையெழுத்திடாவிட்டாலும் உடன்பாட்டை மதிப்பதாக வாக்குறுதி தந்தது.

★*1955*-ஆஸ்திரியாவில் மே 9, 1945 முதல் நிலை கொண்டிருந்த இரண்டாம் உலகப் போரின் நட்பு நாடுகளின் படைகள் அங்கிருந்து விலகின.

★*1975*-யாழ்ப்பாணம் மாநகரத் தலைவர் அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார்.

★*1983*- கொழும்பு வெலிக்கடை சிறையில் இடம் பெற்ற இரண்டாம் கட்ட படுகொலை நிகழ்வில் 18 தமிழ்க் கைதிகள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

★*1990*-பெலாரஸ் சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலையை அறிவித்தது.

★*1990*-திரினிடாட் டொபா கோவில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் பிரதமர் மற்றும் அமைச்சர்களை பணயக் கைதிகளாக ஆறு நாட்கள் வைத்திருந்தனர்.

★*1997*-அல்ஜீரியாவில் சி செரூக் என்ற இடத்தில் 50 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

★*2002*-உக்ரைனின் லுவிவ் நகரில் வான் களியாட்ட நிகழ்ச்சியின் போது போர் விமானம் ஒன்று மக்களின் மீது வீழ்ந்ததில் 85 பேர் உயிரிழந்தனர். 100 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புக்கள்

★*1879*-நாவலர் சோமசுந்தர பாரதியார், தமிழறிஞர் (இ.1959)

★*1955*-அலன் போடர், அவுஸ்திரேலிய துடுப்பாளர்

### *நவாலியூர்- சோமசுந்தரப் புலவர்*



யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கில் மானிப்பாய் கோவிற்பற்றைச் சேர்ந்த நவாலி என்னும் சிற்றூரில் வன்னியசேகர முதலியார் வழித்தோன்றலாய் கதிர்காமர் இலக்குமிப்பிள்ளை ஆகியோருக்கு பிறந்தவர் சோமசுந்தரப் புலவர். தனது 28 ஆவது வயதில் சங்குவேலியைச் சேர்ந்த புலவரின் தாய்மாமனார் வேலுப்பிள்ளை என்பவரின் புதல்வி சின்னம்மையைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு இளமுருகனார், நடராசன், வேலாயுதபிள்ளை, மங்கையற்கரசி, சரசுவதி எனும் பெயரில் ஐந்து பிள்ளைகள் இருந்தனர்.

நவாலியூர் அருணாசல உபாத்தியாயரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் தனது உறவினரான இராமலிங்க உபாத்தியாயரிடம் ஆங்கிலத்தையும் கற்றார். சிறு வயதிலேயே பேச்சாற்றலையும் விவாதத்திறமையையும் பெற்றார். தனது இளமைப் பருவத்திலேயே அட்டகிரி முருகன் பதிகம். அட்டகிரி முருகன் திருவூஞ்சல், சாவித்திரி கதை, பசுவின் கதை போன்ற நூல்களை இயற்றினார்.

சோமசுந்தரப் புலவர் தங்கத் தாத்தா என அன்பாக அழைக்கப்பட்ட இவர் ஏறக்குறைய பதினைந்தாயிரம் செய்யுள்களை இயற்றியுள்ளார். ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை போன்ற பல செய்யுள்களை சுவையான முறையில் எளிய தமிழில் பாடியுள்ளார். பலவகைப் பக்திப் பாடல்களையும் அவர் இயற்றியிருக்கின்றார். பனையின் பெருமைகளைக் கூறும் தாலவிலாசம், கதிர்காம முருகக் கடவுளைக் குறித்து பாடிய கதிரைச் சிலேடை வெண்பா ஆகியன புகழ்பெற்றவை.

பதிகம், ஊஞ்சல் என்றும் இரண்டு பிரபந்தங்களையும் பாடிய சோமசுந்தரப் புலவர் கலம்பகம், நான்மணி மாலை, அட்டகம், அந்தாதி, சிலேடை வெண்பா, திருப்பள்ளியெழுச்சி ஆகிய பிரபந்தங்களையும் பாடினார். சைவத் தலங்களை மையமாக அட்டகிமுக் கலம்பகம், தில்லை அந்தாதி, கதிரைச் சிலேடை வெண்பா போன்ற பிரபந்தங்களைப் பாடியுள்ளார். நானூறுக்கும் மேற்பட்ட அடிகளைக் கொண்ட கலிவெண்பாப் பாவகையால் அமைந்த தாலவிலாசம் என்ற இவரது செய்யுள் நூல் பனையின் பெருமைகளைக் கூறுகிறது.

### இயற்றிய நாடகங்கள்

இவர் இயற்றிய நாடகங்களில் உயிரிளங்குமரன் உள்ளடக்கப்படுகிறது. இவர் குழந்தைகளுக்கான 32 படைப்புக்கள் அடங்கிய நூலினை வெளியிட்டுள்ளார். அதில் ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை, கத்தரி வெருளி, தாடியறுந்த வேடன், இலவு காத்த கிளி, பவளக்கொடி, எலியும் சேவலும், கழையோடை, வேற்பதிகம், Audio கத்தரி வெருளி போன்ற நாடகங்களை குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் இழந்திட்ட கலைகள் தழைத்திட வேண்டும்

## பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இருபத்தைந்து ஆண்டுகால் இடம்பெயர்வு அவலங்களிடையே பாரம்பரிய நிலங்களில் இழந்த பெறுமதியான கலைகள் மீண்டும் தழைத்திட, வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் வெள்ளிவிழா நிகழ்வில் தலைமைதாங்கி உரையாற்றிய பொழுதே அவர் இவ்வாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலமென்பது வெறுமனே இருப்பிற்கான இடம் மட்டுமல்ல. மக்களின் வாழ்வர்தாரம், கலை வாழ்வு அத்தனையையும் உள்ளடக்கியது.

போருக்காக என்று தொடங்கி இன்று அபிவிருத்தியின் பெயரால் பண்பாட்டு நிலங்களை இழக்கும் நிலைமைகள் தாங்க முடியாதவையாகும். மீளவும் எல்லா மக்களும் தங்கள் பூர்வீகக் கிராமங்களில் வாழ்க்கையைத் தொடங்கி தங்கள் பாரம்பரிய கலைவாழ்வின் முழுமையைக் காணுதல் வேண்டும்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகால இடம்பெயர் அவலங்களிடை தன் செயற்பாட்டுக் களங்களை ஆங்காங்கே மாற்றிய போதும் இன்றுவரை செயற்படும்.

தெல்லிப்பழை கலை இலக்கிய களம் அதன் வெள்ளிவிழா நிகழ்வினை மீண்டும் சொந்தப் புலத்திலிலேயே கொண்டாடுதல் ஊர் மீள்தலுக்கான மக்களின் நம்பிக்கைக்கு வலுத்தருகின்றது.

எங்கள் பண்பாடு சார்ந்த நல்ல ரசனையை வளர்த்தலையும் மொழி சார்ந்த ஆக்கத்திறனை வளர்த்தலையும் இலக்காக் கொண்ட தெல்லிப்பழை கலை இலக்கியக் களமானது எதிர்காலத்தில் தற்பொழுது மீளக் குடியேறிவரும் மக்களின் மத்தியில் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்வது இன்றியமையாதது என்றார்.

இந்நிகழ்வில் முதுபெரும் புலவர் கலாபூஷணம் வை.கா.சிற்றம்பலம்,மூத்த பத்திரிகையாளர் புலவர் ம.பார்வதிநாதசிவம் ஆகியோர் நிகழ்வுக்கு தலைமை தாங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனால் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.ராஜேந்திரன், மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் சிவமலர் ஆனந்தசயனன், கலாநிதி ஆறு. திருமுருகன், கலை இலக்கிய களத்தின் தலைவர் சு.செல்லத்துரை ஆசிரியை பகீரதி கணேசதுரை ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

## லெனினிசக்கட்சியின் 34 ஆவது ஆண்டு

(யாழ்ப்பாணம்)

புதிய-ஜனநாயக மாக்சிசலெனினிசக் கட்சியின் 34 ஆவது ஆண்டு விழாக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வெள்ளவத்தை தேசிய கலை இலக்கியப் பேரவையின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் கட்சியின் தேசிய அமைப்பாளர் வெ.மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தின் முடிவின்போது கலை நிகழ்வுகள் என்பன நடைபெறும். (அ-9)

## மனநலம் குன்றிய சிறுமியை துஷ்பிரயோகம் செய்த கொடூரன்

### தெல்லிப்பழையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மனநலம் பாதிக்கப்பட்ட சிறுமியை பாலியல் வல்லுறுவுக்குட்படுத்தி கொலைசெய்ய முயன்ற கொடூரத்தனமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இக்கொலை முயற்சி சம்பவம் நேற்றைய தினம் தெல்லிப்பழையில் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தெல்லிப்பழையை சேர்ந்த 17 வயதுடைய மனநலம் பாதிக்கப்பட்ட சிறுமி ஒருவரை அவரின் மாமனார் பல மாதங்களாக பாலியல் வல்லுறுவுக்குட்படுத்தி வந்துள்ளார். இதனால் சிறுமி கர்ப்பம் தரித்துள்ளார். இதனையறிந்த சிறுமியின் மாமனார் அவரை கொலை செய்வதற்கு முயன்று வந்துள்ளார்.

இக் கொலை முயற்சியில் ஒரு கட்டமாக நேற்றைய தினம் சிறுமியை கிணறு ஒன்றினுள் தள்ளி கொலை செய்வதற்கு முயன்றுள்ளார்.

எனினும் இச்சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சிறுமியின் பெற்றோர் அதிலிருந்து தமது பிள்ளையை காப்பாற்றி தமக்கு பாதுகாப்பு அளிக்குமாறு தெல்லிப்பழை பொலிஸாரிடம் தஞ்சம் கோரியுள்ளனர். இதனையடுத்து பெற்றோரிடம் முறைப்பாடொன்றினை பதிவு செய்த பொலிஸார் அவரை வைத்திய பரிசோதனைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்ய முயன்ற சிறுமியின் மாமனார் தற்போது தலைமறைவாகியுள்ளதோடு நேற்று வரை பொலிஸாரினால் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-4)

## தெல்லிப்பழை பிரதேசத்தில் மீள்குடியேற்ற பணி முன்னெடுப்பு

### அலென்ரின் எம்.பி.ஆரம்பித்து வைத்தார்

(தெல்லிப்பழை)

வடக்கிற்கான துரித மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய தெல்லிப்பழை பிரதேசத்திற்கு சுமார் 18 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு காடுகளாக தோற்றமளிக்கும் பொது மக்களின் காணிகளை துப்புரவு செய்யும் பணியை ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆரம்பித்து வைத்தார்.

தெல்லிப்பழை பிரதேசத்திலுள்ள பழவின் காமம், பழவின்காமம் வடக்கு, தெற்கு மற்றும் மாவிட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு ஆகிய பிரதேசங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச உதவித்திட்டப்பணிப்பாளர், ஈ.பி.டி.பி.யின் வலி. வடக்கு பிரதேச அமைப்பாளர் அன்பு, தெல்லிப்பழை இராணுவக் கட்டளைத் தளபதி, அரச அதிகாரிகள், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ-2)

## ரோந்து பணியில் கூட்டாக ஈடுபட்டால் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்

### பிரசாத் காரியவசம் அறிவுரை

(கொழும்பு)

கூட்டாக ரோந்துப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீனவர்கள் அத்துமீறி கடல் எல்லைக் குள் பிரவேசித்தல் தொடர்பில் இரு நாடுக ளுக்கும் இடையில் அடிக்கடி முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

அண்மையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 23 இந்திய மீனவர்களை இலங் கைக் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

மீனவர்களை விடுதலை செய்வது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அடுத்த வாரமளவில் இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனிதாபிமான அடிப்படை யில் பிரச்சினைகளை நோக்குவதாகவும் சட்ட விரோத மீன்பிடியைத் தடுப்பது கடற்படையினரின் கடமைகளில் ஒன்றாகும்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற் பரப்பிற்குள் பிரவேசிப்பதனை தவிர்க்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

## பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஆவணி மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பரீட்சை அனுமதி அட்டைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, உரிய மாணவர்கள் இதனைக் கவனத்திலெடுத்து பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)






யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் மாணவ முதல்வர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாடசாலையின் பழைய மாணவர் சங்க [illegible] மாணவ முதல்வருக்கு சின்னம் சூட்டுவதையும் ஏனைய மாணவத் தலைவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 200

### யுத்தத்தின் முடிவுகளும் யுத்தம் கற்பித்த பாடங்களும்

... இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவுகளை அரசியல் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் உறுதிப்படுத்த சோவியத் யூனியன், மற்ற சோஷலிச முகாம் நாடுகளின் சுமார் 30 ஆண்டு கால முயற்சிகள் தேவைப்பட்டன. ஐரோப்பிய பாதுகாப்பு, ஒத்துழைப்பு சம்பந்தமான 1978 ஆம் ஆண்டு ஹெல்சிங்கியில் கையெழுத்தான உடன்படிக்கை இந்த விடயத்தில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது கடந்த யுத்த முடிவுகளைத் தொகுத்துரைத்து, சமாதானத்தையும் மக்களினங்களின் பாதுகாப்பையும் வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகளைத் திறந்திவிட்டது.

யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டம் முழுவதும் சோவியத் யூனியன், தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் சமாதானக் கொள்கையை, சமாதான சகவாழ்வு, ஒத்துழைப்புக் கொள்கையையும் கடைப்பிடித்தது, கடைப்பிடித்து வருகிறது. லெனினிய சமாதானப் போர்த்தந்திரத்தின் மீதான விசுவாசத்தை சோவியத் யூனியன் கம்யூனிஸ்கட்சியின் 26-வது காங்கிரஸ் மீண்டும் ஊர்ஜிதப்படுத்தியது: "சமாதானத்தைப் பேணிப்பாது காப்பதைக் காட்டிலும் நமது கட்சிக்கும் நமது மக்களுக்கும் ஏன் உலக மக்கள் அனைவருக்கும் சர்வதேச அரங்கில் முக்கியக் கடமை வேறு எதுவுமில்லை" என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

சோவியத் யூனியனில் இருந்த எல்லா மக்களினங்களின் தன்னலமற்ற ஆதரவின் பயனாய் சோவியத் இராணுவம் வெற்றி பெற்றது. போர் முனைக்கும் பின்னணிக்கும், இராணுவத்திற்கும் மக்களுக்கும் இடையேயான ஒற்றுமை வெற்றிக்கான தீர்மானகரமான காரணியாக இருந்தது.

அரசியல் மற்றும் இராணுவத் தலைமையின் ஒற்றுமை, மார்க்சிய-லெனினியத் தத்துவத்தையும் வளர்ச்சியடைந்த சோவியத் போர் விஞ்ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்ட சோவியத் அரசின் அரசியல் மற்றும் இராணுவப்போர்த் தந்திரத்தின் இடையறாத் தொடர்பு ஆகியன சோவியத் துருப்புகளின் வெற்றிகளுக்கான காரணங்களாகும்.

ஆக்கிரமிப்பு தொடங்குவதற்கு முன் சோவியத் இராணுவத்தைவிட சக்தியிலும் சாதனங்களிலும் விஞ்சி நின்றதோ, பாசிச வேர்மஹ்டின் கைவசமிருந்த மேற்கு ஐரோப்பா முழுவதன் பெரும் பொருளாதார மூலாதாரங்களோ, திடீர்த்தாக்குதலோ எதுவுமே ஹிட்லரின் இராணுவத்திற்கு உதவவில்லை.

2 ஆம் உலக யுத்தத்தின் பின் உலகம் சோவியத் யூனினின் தலைமையில் சோஷலிச முகாமாகவும் அமெரிக்கா, பிரிட்டன் தலைமையில் முதலாளித்தவ முகாமாகவும் இரண்டாகப் பிளந்துவிட்டது என்பதைக்குறிக்கும் சித்திரம்



சோவியத் இராணுவம் இரண்டாவது உலக யுத்தத்தின் போது நடத்திய எல்லா மகத்தான சமர்களிலும் சோவியத் போர்க் கலைக்கே உரித்தான உயர்ந்த போர்க் குணம், செயல் முனைப்பு, போர் நடவடிக்கைகளின் வடிவங்களையும் முறைகளையும் தேர்ந்தெடுப்பத்தில் வளைந்து கொடுக்கும் தன்மை போன்ற அம்சங்கள் வெளிப்பட்டன. சோவியத் இராணுவத்தின் வெற்றி அதேநேரத்தில் எதிரியின் போர்த் தளவாடங்களின் மீது சோவியத் போர்த் தளவாடங்கள் அடைந்த வெற்றியாக, வெற்றிக்கான அடிப்படைகளைத் தமது தன்னலமற்ற உழைப்பால் உருவாக்கிய உள்நாட்டு உழைப்பாளிகளின் வெற்றியர்கத் திகழ்ந்தது.

யுத்தத்தின் போது சோவியத் துருப்புகள் உயர்வான தார்மீகப் பண்புகளையும் வெல்லற்கரிய போர்த் திறமையையும் வெளிப்படுத்தின. புகழ்மிகு சோவியத் தாயகப்பற்று சோவியத் போர் வீரர்களைப் பரந்த அளவு வீரச் செயல்களில் ஈடுபடுமாறு ஊக்கிவித்தது. யுத்தத்தின் போது 7 மில்லியனுக்கும் கூடுதலான போர்வீரர்களும் இராணுவ அதிகரிகளும் சோவியத் யூனியனின் விருதுகளும் பதக்கங்களும் அளித்து கௌரவிக்கப்பட்டனர். கம்யூனிஸ்ட் கட்சி விடுத்த அறைகூவலுக்கேற்ப பரவலாக வெடித்த கெரில்லா இயக்கம் சோவியத் மக்களின் நாட்டுப் பற்றையும் தாயகத்திற்கு அவர்கள் வழங்கிய தீவிர ஆதரவையும் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியது.

எதிரியின் பின்னணியில் சுமார் 6200 கெரில்லாப் படை அணிகளும் குழுக்களும் இயங்கின; 735 தலைமறைவுக் கட்சி உறுப்புகள் இருந்தன. கெரில்லாப் படை இயக்கம் மாபெரும் தேசபக்த யுத்தத்தின் முக்கியப் போர்த் தந்திரக் காரணியாக விளங்கியது. பாசிச ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடித்து வெற்றி காண்பதில் இது மதிப்பிடப்பட முடியாத பங்கினை ஆற்றியது.

### யுத்தத்தின் பிரதான, தீர்மானகரமான போர்முனை

பாசிசத்தின் மீதான வெற்றி ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி நாடுகளிலிருந்த மக்களின் கூட்டு முயற்சிகளால் அடையப்பட்டது. மூன்றாறாவது ரைஹிற்கு எதிரான போராட்டத்தில் இவர்கள்தான் பிரதான சக்தியாக விளங்கினர். ஆனால், பொது எதிரியின் மீது அடையப்பட்ட வெற்றியில் கூட்டணி உறுப்பு நாடுகளின் பங்கு ஒரே மாதிரியானதல்ல. பாசிசக் கூட்டை முறியடிப்பதில் சோவியத் யூனியன் தீர்மானகரமான பங்காற்றியது. உலக ஆதிக்கத்தை நோக்கி நடைபோட்ட ஜேர்மனிய பாசிசத்திற்கு இது தடையாக நின்றது. யுத்தத்தின் முக்கியச் சுமையைத் தன் தோள்களில் தாங்கியுது. ஹிட்லரின் ஜேர்மனியையும் பின் இராணுவ வெறிகொண்ட ஜப்பானையும் முறியடிப்பதில் தீர்மானகரமான பங்காற்றியது. யுத்த ஆண்டுகளில் யாரும் இதை அதிகாரப் பூர்வமாக ஆட்சேபிக்கவில்லை. அந்நாட்களில் சோவியத் யூனியனின் தீர்மானகரமான பங்கைப் பற்றி மேற்கே நிறையப் பேசினார்கள்.

செஞ்சேனையின் வெற்றிகரமான நடவடிக்கைகள் இல்லாமலிருந்தால் அமெரிக்க துருப்புகளால் ஆக்கிரமிப்பாளனை எதிர்த்து நின்றிருகக் முடியாது. யுத்தமானது, அமெரிக்க கண்டத்திற்கு பரவியிருக்கும் என்று அமெரிக்க ஜெனரல் மார்ஷல் கூறினார்.

## யுத்தத்தின் முடிவுகளும் யுத்தம் கற்பித்த பாடங்களும்



2ஆம் உலக யுத்தத்தின் பின்சோவியத் யூனியன் சோஷலிச நாடாக கிழக்கு ஜேர்மனியையும் அமெரிக்கா முதலாளித்துவ நாடாக மேற்கு ஜேர்மனியையும் பிரித்தது; இவர்களுக்கிடையான ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஜேர்மனை இரண்டாகப் பிரித்து பேர்லின்சுவர் ஆகஸ்ட் 13,1961 எழுப்பப்பட்டது



2ஆம் உலக யுத்தத்தில் பங்குபற்றிய பவ்லிச் சென்கோ என்ற இப்பெண் யுத்தம் முடிந்தபின் வரலாற்றுதுறையில் மீண்டும் தன் கல்வியைத்தொடர்ந்தார்(சோவியத்நாடு)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியத்தலாவ கருத்தரங்கை புறக்கணித்த தூதுவர்கள்

## விளக்கம் கோருகிறது வெளிவிவகார அமைச்சு





(கொழும்பு)

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கை தூதுவர்களுக்காக அண்மையில் தியத்தலாவ இராணுத்தளத்தில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் பங்கேற்காது புறக்கணித்த இரண்டு தூதுவர்களிடம் வெளிவிவகார அமைச்சு விளக்கம் கோர முடிபு செய்துள்ளது.

இந்த மாதத் தொடக்கத்தில் நடத்தப்பட்ட இந்தச் செயலமர்வில் 59 நாடுகளின் தூதுவர்கள் மற்றும் துணைத் தூதுவர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

ஆனால் பிரான்சுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜெயதிலகவும் அண்மையில் கியூபாவிற்கான தூதுவராகப் பொறுப்பேற்ற தமரா குணநாயகமும் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றவில்லை.

வெளிநாடுகளில் பணியாற்றும் அனைத்து தூதுவர்களையும் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் தயான் ஜெயதிலகவும் தமரா குணநாயகமும் இதில் பங்கேற்காது புறக்கணித்த காரணத்தால் விளக்கம் கோர முடிபு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் தாம் கருத்தரங்கை புறக்கணித்ததற்கான காரணத்தை இன்னமும் வழங்கவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# நோன்புக்கால தொழுகைக்கு பாதுகாப்பு வழங்கப்படும்

## பாதுகாப்பு அமைச்சு உறுதி

(கொழும்பு)

நோன்புக் காலத்தில் இரவு நேரங்களில் தொழுகைகளில் ஈடுபடும் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகப் பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நோன்புக்காலத்தில் முஸ்லிம்கள் இரவு நேரங்களில் வீடுகளில் கூடி தொழுகைகளில் ஈடுவடுவது வழமை. இந்தக் காலத்தில் முஸ்லிம் பெண்கள் இரவு நேரங்களில் பள்ளி வாசல்களுக்கு சென்று வருவார்கள்.

இவ்வாறானவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பொலிஸ்மா அதிபருடன் நடத்திய பேச்சுவார்த்தையில் தான் கோரிக்கை விடுத்ததாகச் சுட்டிக்காட்டிய அவர் இக்காலத்தில் பொலிஸாரின் இரவு நேரரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்ததாகவும் கூறினார். இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அவர்கள் முன்வந்துள்ளனர்.

அதேநேரம் குருநாகல் மற்றும் தம்புள்ள பள்ளிவாசல் சம்பவங்கள் போன்ற சம்பவங்கள் ஏற்படும் போது அவை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

சமூக விடயங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டு அரசியல்வாதிகளால் அரசியல் இலாபத்துக்காக கையாளப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)



தொல்புரம் மேற்கு மன்னதோட்டம் ஜெகஜோதி அம்பாள் ஆலய பத்தாம் திருவிழாவின் போது... (படம்:- உ. சாளீன்)

# கிழக்கில் ஆளும் கட்சி அமோக வெற்றி பெறும்

## பிரதியமைச்சர் முரளிதரன் நம்பிக்கை



(மட்டக்களப்பு)

**மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் கிழக்கு மாகாண சபையை அரசாங்கம் வெற்றி கொள்வது உறுதியென பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்திற்கு நூற்றுக்கு நூறு வீதம் வெற்றிவாய்ப்பு உள்ளதாக தெரிவித்த பிரதியமைச்சர் இம்முறை தேர்தலில் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதியமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் ஒருபோதுமில்லாதவாறு பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. பெருமளவு வேலைவாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது.

எதிர்வரும் தேசத்துக்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கு மட்டும் 5 ஆயிரம் மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகள் கிழக்கு மக்கள் மனதில் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதை குறிப்பிட முடியும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. எதற்கும் பிரயோசனமில்லாதவர்கள் என்ற மனநிலை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இம்முறை 14 பேர் தேர்தலில் களமிங்குகின்றனர். இவர்கள் அனைவருமே மக்கள் அபிமானத்தை பெற்றவர்களாவர்.

மூன்று கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 14 வேட்பாளர்களில் 5 முஸ்லிம்களும் மூன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஆறு ரி.எம்.வி.பி. உறுப்பினர்களும் அடங்குகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் களமிறங்கும் மூவரும் கல்விமான்களும் சிறந்த மக்கள் சேவகர்களுமாவர்.

இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மாவட்டங்களில் மக்களின் முழுமையான ஆதரவைப் பெற்று அரசாங்கம் அமோக வெற்றி பெறுவதில் எவ்வித சந்தேகமுமில்லை எனவும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# இராணுவ வீரர் தூக்கிட்டு தற்கொலை

கெப்பதிகொல்லேவ - கல்கடவல பிரதேசத்தில் இராணுவ வீரர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிய வருகின்றது. பெண் ஒருவரை கத்தியால் குத்தி காயப்படுத்திய சம்பவத்தில் பொலிஸாரிடம் சிக்காமல் மறைந்து வாழ்ந்து வந்த நிலையில் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். பிரேத பரிசோதனைக்காக சடலம் அநுராதபுரம் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பிள்ளையானின் கனவுக்கு இம்முறை ஆப்பு வைக்கப்படும்

## முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவர் தெரிவிப்பு

முஸ்லிம்களின் வாக்குகளினால் முதலமைச்சராக காத்திருக்கும் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு இம்முறை முஸ்லிம்கள் வாக்களித்து தமது வாக்குப் பலத்தை விரயம் செய்யப்போவதில்லை.

இது அவரது முதலமைச்சர் கனவுக்கு ஆப்பு என முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவர் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் வேட்பாளர்களையும் நம்பி களம் இறங்கியிருக்கும் பிள்ளையானுக்கு முஸ்லிம்கள் நிச்சயமாக வாக்களிக்கப்போவதில்லை. இது தொடர்பில் தெரிவித்த அவர்,

இம்முறை தேர்தலில் அரச தரப்புக்குச் செல்லும் கிழக்கு முஸ்லிம்களின் வாக்குகள் அனைத்தும் அவர்களது அபிலாசகைளுக்கும் தனித்துவத்திற்கும் விழும் மரண அடியாகவே இருக்கும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களிக்கும் தமிழர்கள் தமது உரிமை போராட்டத்திற்கான இன்னுமொரு மைல் கல்லை சர்வதேசத்தில் உருவாக்குவார்கள்.

அவர்களது எல்லாத் தோல்விகளையும் ஏறக்கட்டி பரணில் போடும் ஒரு சிறப்புப் பணியினை இந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தல் செய்யும். இது தமிழர்களின் உயிர் போராட்டம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை தனித்து நிற்பதும் அத்தகைய காரணங்களின் அடிப்படையில்தான் என்பதை முஸ்லிம் சமூகம் நன்கு அறியும்.

இந்நிலையில் அரச தரப்பான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அளிக்கின்ற ஒவ்வோர் வாக்கும் முஸ்லிம் சமூகத்தை நடுக் கடலுக்கு கொண்டு சென்று மூழ்கடிப்பதாகவே அமையும். இதை தெளிவுற சிந்திக்கும் எந்தவொரு முஸ்லிமும் ஐ.ம. சு.மு.வுக்கு வாக்களிக்கமாட்டான்.

இது பிள்ளையானின் முதலமைச்சர் கனவுக்கு வைக்கும் ஆப்புத்தான் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# அனைத்து இன மக்களும் இணைந்து நீதி என்னும் மேடையை உருவாக்குவோம்

## மாதுலுவே தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு ஜனநாயக நெறிமுறைகளிலிருந்து விலகிச் சென்றுள்ளதாகவும் நீதியும் நேர்மையும் மக்களை விட்டு விலகிச் சென்றுள்ளதாகவும் மாதுலுவே சோபிததேரர் தெரிவித்துள்ளார்.

நீதியான சமூகத்திற்கான தேசிய அமைப்பு என்ற அமைப்பை ஆரம்பித்து உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சியைக் கவிழ்ப்பதோ அல்லது புதிய ஆட்சி ஒன்றை நிறுவுவதோ எனது அமைப்பின் நோக்கமல்ல.

நீதி என்னும் மேடையை சகல இனங்களும் சேர்ந்து உருவாக்க வேண்டும். இதே வேளை போர் இடம்பெற்ற காலத்தில் குண்டு வெடிப்புக்கள் சாதாரணமான சம்பவமாக அமைந்தது என ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.


அதேபோன்று ஊழல் மோசடிகள் இன்று வழமையான சம்பவமாக மாற்றமடைந்துள்ளது.

எம்மால் உருவாக்கப்பட்ட அரசியல் கலாசாரமே இதற்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# மின்விளக்கும் அதன் விருத்தியும்



வெப்பந்தோடு ஒளி வீசுகிற விளக்கு (Incandescent Lamp)


பொதுமக்களின் பாவனையிலுள்ள மின் விளக்குகளில் மிகப் பழைய வகையான விளக் காக வெப்பத்தால் ஒளிவீசும் மின் விளக்கு திகழ்கிறது. 1879 ஆம் வருடம் வெப்பத்தால் ஒளிவீசும் விளக்கின் செயற்படக்கூடிய வடிவம் இங்கிலாந்தில் வசித்த Sir Joseph Swan ஆலும் அமெரிக்காவில் வசித்த Thomas Eison என்பவராலும் ஒரே நேரத்தில் கண்டுபிடிக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து வந்த பல தசாப் தங்களாக பல குறிப்பிடக் கூடிய மாற்றங்களுக்கு உள்ளாகிய இவ் விளக்கு இன்று பாவனையி லுள்ள மின்விளக்காக திகழ்கின்றது. அதா வது மின்விளக்கு பயன்படுத்திய மூலகங்களி லும் அதனது உற்பத்தி முறையிலும் பல மாற் றங்கள் ஏற்பட்டுள்ளதன் விளைவாக எமது தேவைக்கேற்றவாறான இன்று பாவனையி லுள்ள மின்விளக்கு தோற்றம் பெற்றுள்ளது.



"புதிய வகை எடிசன் மின்விளக்கு - New Type Edison Lamp" 1893-189

1880 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 1890 ஆம் ஆண்டின் முற்பகுதி வரையான காலப்பகுதியில் எடிசனின் மின்விளக்கு குறிப்பி டக்கூடிய முன்னேற்றங்களை அடைந்தது. அமைப்பிலும் வடிவத்திலும் ஏற்பட்ட இம் மாற் றங்கள் காரணமாக புதிய வகை எடிசன் மின் விளக்கு New Type Edison Lamp என அது அழைக்கப்பட்டது.

1893 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்து எடி சன் மின்விளக்குகளில் காபனால் ஆன குழாய் வடிவ இழை பயன்படுத்தப்பட்டது. இக் காபன் இழை குறிப்பிடத்தக்க பல குறைபாடுகளை கொண்டிருந்தது. 1893 ஆம் ஆண்டில் பாவ னைக்கு வந்த celloulose filament ஆனது




Edison New Type 1893-1899

புதிய வகை எடிசன் மின்விளக்கின் பாகங்கள்

வலிமையான, சீரான பயன்பாட்டை கொடுத்தது.

யாதாயினும் ஒரு கடத்தியினூடு மின்னோ ட்டம் செல்லும்போது ஓர் குறிப்பிட்டளவு சக்தி வெப்ப வடிவில் விர யமாகிறது. யாதா யினும் ஒரு பொரு ளின் வெப்பநிலை 525° C (977° F) இலும் கூடும் போது ஓர் குறிப்பிட்ட அளவு ஒளியை வெளி வீசும். எனவே, ஒரு கடத்தியின் வெப்ப நிலை மேற்படி பெறுமானத்தை விட அதிகரிக் கும் போது அது ஓர் ஒளிமுதலாக (as a light source) தொழிற்படும்.



By Thomas Edison for an improved electric lamp, January 27, 1880

உலோகமொன்றை உயர் வெப்பநிலைக்கு சூடாக்குவதன் மூலம் ஒளியை பிறப்பிக்கும் ஓர் உபகரணமே வெப்பத்தோடு ஒளி வீசுகிற விள க்கு (Incandesent Lamp) ஆகும்.

வெப்பத்தோடு ஒளிவீசுகிற விளக்கிற்கு (In candesent Lamp) மிகவும் தெரிந்த உதார ணமாக எமது வீட்டு மின்சுற்றில் பயன்படுத்தப் படும் இழை மின்குமிழை (House hold bulb) குறிப்பிடலாம். இது கண்ணாடிக்குமிழ் ஒன்றி னுள் ஈர்க்கப்பட்ட அல்லது சுருளாக்கப்பட்ட இழை ஒன்றை கொண்டுள்ளது. ஆரம்ப காலத் தில் காபன் இழை பயன்படுத்தப்பட்டது. ஆனால், நவீன விளக்குகளில் தங்குதனாலான (tungs




Carbon filament lamp



A light bulb with a standard E27 Edison screw base


ten) மெல்லிய உலோக இழை பயன்படுத்தப் படுகின்றது. இவ்விழை உயர் உருகுநிலை (high melting point of 3410° C (6170° F) உடை யதாக இருக்க வேண்டும். ஏனெனில் உயர் வெப்ப நிலையில் இழையால் கலப்படும் ஒளிச் சக்திக்கும் வெப்ப சக்திக்கும் இடையிலான விகிதம் உயர்வாகும். எனவே, இழை உயர் வெப்ப நிலையில் உள்ள போது திறனில் கூடிய ஒரு ஒளி முதல் (Lost efficient lignt Source) பெறப்படும். இக் கண்ணாடிக்குமிழி னுள் உள்ள வளி வெற்றிடம் (vaccum) ஆக்கப்பட்டிருக்கும். அல்லது தங்குதனுடனோ அல்லது கண்ணாடியுடனோ தாக்கமுறாத ஒரு சடத்துவ வாயுவால் (inert gas) குமிழ் நிரப் பப்பட்டிருக்கும் அல்லாவிடின் சூடாக்கப்பட்ட இழை சூழவுள்ள வளி மண்டலத்துடன் (surr ounding atmosphere) இரசாயனத் தாக் கத்திற்கு உட்படும். இழை எரிந்து போவதை தடுப்பதற்காக குமிழானது சடத்துவ வாயுவால் நிரப்பப்பட்டுள்ளது. குமிழை வெற்றிடமாக்குவத ற்கு பதிலாக சடத்துவ வாயுவால் நிரப்பினால் இழை ஆவியாதல் (evap oration of the filament) மெதுவாக நிகழும். இதனால் நீண்ட ஆயுட்காலத்தை (prolonging the life) குமிழ்




கொண்டிருக்கும். இவ் வாயுவானது ஆகன் Ar gon அல்லது கிரிப்தனுடன் ஓர் சிறு அளவு நைத ரசனினதும் nitrogen ஓர் குறிப்பிட்ட வீதத் திலான கலவையாகும். மின்குமிழின் வலுவிற் கும் (Wattage) அதன் பிரகாசத்திற்கும் (Bri ghtness) ஏற்ப வாயுக்களின் விகிதாசாரம் அமைந்திருக்கும். கடந்த பல வருடங்களாக வெப்பத்தோடு ஒளிவீசும் மின்குமிழானது நைத ரசனும் ஆகனும் கொண்ட கலவையால் (mixt ure of nitrogen and argon) நிரப்பப்பட்டு வந்தது. தற்போது அரிதான வாயுவான கிரிப் தன் (rare gas Krypton) பயன்படுத்தப்படு கிறது. ஏனெனில் குமிழினுள் கிரிப்தன் சூடாக் கப்பட்ட மிகப் பிரகாசமான ஒளி (brighter light) உருவாக்கப்படும்.

இழையினூடாக மின்சாரம் பாயும் அதன் வெப்பநிலை ஏறக்குறைய 3000° C (5000°F) இற்கு உயரும். இவ் உயர் வெப்பநிலை கார ணமாக இழை ஒளிர்வதால் அது ஒளியை வழங்குகிறது.


கண்ணாடி குமிழுக்கு பதிலாக உருக்கப் பட்ட குவாட்ஸ் ஆல் ஆன கண்ணாடிச் சிமிழின் (Compact fused- quartz glass tubes) பயன்பாடு வெப்பத்தோடு ஒளிவீசும் மின் குமிழின் வடிவமைப்பில் பாரிய மாற்றங்களை (radical changes) ஏற்படுத்தியது. இப் புதிய வலிமையான சுவரையுடைய (Stronger wall ed) குமிழ்களால் ஓர் திரிபுற்ற வெப்பத்தோடு ஒளிவீசும் விளக்கான (a variant of the in candescent lamp) தங்குதன்- அலசன் விளக்கு (Tungsten-halogen lamps) செய் வது சாத்தியம் ஆகியது. தங்குதன்- அலசன்



The double-contact bayonet cap on an incandescent bulb

விளக்குளில் உள்ள அலசன் இழையிலிருந்து ஆவியாக்கப்பட்ட தங்குதன் துணிக்கைகளை (Tungsten particles) மீளவும் ஓர் சக்கரமாக கொண்டு வந்து விளக்கிற்கு புத்துயிர் (Reg enerative) அளிக் கிறது இதனால் மின்குமி ழின் ஆயுட்காலம் கூட்டப்படுவதோடு (Exte nding the life) மட்டுமல்லாமல் ஒளிரும் திறனும் (Luminous efficiency) அதிகரிக் கப்படுகின்றது. குவாட்ஸ் சுவரையுடைய குமிழ் அறிமுகப்படுத்தப்படும் வரை இவ் உயர் வெப்ப நிலையில் பயன்படுத்தப்படும் தங்குதன்- அல


ஏ.குகன்
BSc.(Cey), Dip in Ed.(Merit), Msc.in Phy oF Material, MATE (International)
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.


சன் விளக்கு செய்வது சாத்தியமாகவில்லை. இம் மின்குமிழ்கள் ஆகன் அலசன் (வழக்க மாக வுறோமின்-Usually bromine) வாயுக் களுடன் சிறிதளவு நைதரசனும் கொண்ட வாயுக்கலவையால் நிரப்பப்பட்டிருக்கும். வெப்ப ஒளிவீச்சுத் தத்துவப்படி (Principle of inca ndescence) திண்மங்களும் வாயுக்களும் உயர் வெப்பநிலையில் கட்புல ஒளியை காலும். ஒவ்வொரு சடப்பொருளும் (Material) அதன் தன்மைக்கு ஏற்ப ஓர் குறிப்பிட்ட நிற ஒளியை தரும்.

(தொடரும்....)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 68

**DNA யின் கட்டமைப்பை விபரித்து நோபல் பரிசு பெற்ற இரு விஞ்ஞானிகளின் பெயர்களைக் குறிப்பிடுக?**

விடைகளை 06.08.2012 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**து.பிரதீபன்**
ஆசிரியர், பிரிவு -A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.


பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.


**புதிர் 67 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி** — வெல்லப்படவில்லை

**புதிர் 67 இற்கான கேள்வியும் விடையும்:**

**ஓசோன் படலம் புவியின் மேற்பரப்பிலிருந்து எத்தனை km உயர இடைவெளியில் காணப்படுகிறது?**

**10 km க்கும் 50 km க்கும் இடையில்**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 68

சரியான விடை:-...............................
முழுப்பெயர்:-...............................
முகவரி:-...............................
தொ.பே. இல:...............................
கையொப்பம்:...............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல இந்துக் கோவில்களுக்கு கொடிச்சேலை வழங்கும் மாண்பு செங்குந்த குலத்தவருக்கே





செங்குந்தர் என்ற சொல் குந்தத்திற் குரியவர் என பொருள்படுகின்றது. **குந்தம் என்பது ஈட்டியைக் குறிக்கும் என கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் "ஈட்டி எழுபது"** என்னும் பிரபந்தத்தில் குறிப்பிடுகிறார். எனினும் இவர்களுக்கு **கைத்தோழர்** என்ற பெயர் இருந்ததாகவும் காலப்போக்கில் அந்தப்பெயர் மருவி **கைக்கோளர்** எனத் தோற்றம் பெற்றதாகவும் அவர் குறிப்பிடு கின்றார். "எய்தவருக்கு சிறைச் சோறு ஈகுவார் கைக்கோளராகிய செங்குந்தரே" எனக் குறிப்பிடுகின்றார் ஒட்டக்கூத்தர்.

**தானங்களில் சிறந்த தானம் எனச் சொல்லப்படும் வஸ்திர தானத்தை (நெச வுத்தொழிலை) பரம்பரை பரம்பரையா கச் செய்துவரும் இவர்கள் கைக்கோளர் அல்லது செங்குந்தர்கள் என அழைக் கப்படுகின்றனர்.**

எனினும் காலம் செல்லச் செல்ல இவர் களது நெசவுத் தொழில், இறக்குமதிப் புடவைகளால் பாதிக்கப்பட்டமையால் இவர் கள் நெசவுத் தொழிலைக் கைவிட்டு வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்ற போதிலும், சிலர் இன்றும் தமது பரம் பரைத் தொழிலான நெசவுத் தொழிலைச் செய்து வருகின்றனர்.

முந்தைய காலங்களில் இந்த மக்க ளால் நெய்யப்பட்ட கொடிச்சேலையே பயன்படுத்தப்பட்டு வந்தது. எனினும் காலப் போக்கில் இந்தச் சேலை நெய்யும் முறை யில் மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், இவர்களே இன்றும் நல்லூரானுக்கு கொடிச் சேலை கொடுத்து வருகிறார்கள்.

கொடிச்சேலை தினத்தன்று நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து மங்கள வாத்தியங்கள், செங்குந்தர் வீதிக்கு கொடிச் சேலை கொண்டு வருவதற்காக அனுப்பப் படுகிறது. செங்குந்த பரம்பரை எனப்படுப வர்கள் -முருகப்பெருமானின் சகோதரர் களாகவும் படைவீரர்களாகவும் இருந்த நவவீரருடைய வம்சாவழியினர் எனக் குறிப்பிடுகிறார்கள்.

**"செங்குந்தப் படையர், சேனைத் தலைவர், தத்துவாயர், காருகர், கைக் கோளர்"** என சிறப்பித்துக் கூறுகிறார் சேந்தன் திவாகரர்.

**பொதுவாக கோவில்களில் கொடிச் சேலை புனிதமாக பூஜிக்கப்பட்டு, தாம் பாளத்தில் வைக்கப்பட்டு, உபயகாரர் தலையில் சுமக்க, மங்கள வாத்தியம் முழங்க கோவிலைச் சென்றடையும். ஆனால், நல்லூர்க் கந்தசாமி கோவி லுக்கு கொடுக்கும் கொடிச்சேலை இப்படி கொண்டு செல்லப்படுவதில்லை. இந்தக் கொடிச்சீலையைக் கொடுக்கும் செங் குந்த மரபினர் தம்மால் செய்யப்பட்ட ஒரு சிறு தேரினுள் சுவாமியை வைக்கும் இடத் தில் கொடிச்சேலையை வைத்து கொடி யேற்றும் நாளுக்கு முதல்நாள் காலை, மங்கள வாத்தியங்கள் முழங்க தேரை இழுத்து வருவார்கள்.**

கோயிலின் வாயிற் புறத்தை தேர் வந்த டைந்ததும் தேரிலிருந்து கொடிச் சேலையை உபயகாரராகிய செங்குந்தப் பெருமகன், தலையில் சுமந்து சென்று கோவில் பிரதம குருக்களிடம் கையளிப்பார். இந் நல்லூ ரான் கொடிச்சேலையை எடுத்துவரும் தேர் கொன்றலடி வைரவர் கோவிலுக்கு அண்மை யிலுள்ள வேல்மடம் முருகன் ஆலயத் திற்குரியதாகும். இத்தேரிலேயே செங்குந் தர்கள் வருடாவருடம் நல்லூரான் கொடிச் சேலையை வைத்து பூஜித்து இழுத்து வருவர்.

**செங்குந்தர் வாழும் இடங்கள்**

**யாழ்ப்பாணத்தில் கல்வியங்காடு, கர வெட்டி, போன்ற இடங்களிலும் வன்னியில் முள்ளியவளையிலும், திருகோணமலை, மட்டக்களப்பு வவுனியா போன்ற மாவட் டங்களிலும் தென்னிந்தியாவிலும் இருக்கி றார்கள். இவர்கள் செங்குந்த முதலியர்** என அழைக்கப்படுகின்றனர்.

இந்தியாவிலிருந்து செங்குந்த பரம் பரையினருக்கு பருத்திநூல் இறக்கிய துறை யாகையால் அத்துறை பருத்தித்துறை எனப் பெயர் பெற்றது.

இதேவேளை, பருத்தித் துறையின் கற் கோவளம் என்ற இடத்தில் இந்தியாவிலி ருந்து கைக்கோளர் வந்து குடியேறிய தனால், இந்தப்பெயர் உண்டாகியது. இந்தியா விலிருந்து ஏழு வத்தைகளில் (தோணி களில்) வந்த மக்கள் குடியேறிய இடமே திருநெல்வேலியில் உள்ள எழுவத்தை என்ற இடமாகும்.

**அத்துடன் இந்தியாவிலிருந்து வள்ளத் தில், கற்கள் பருத்தித்துறை இறங்குதுறை க்கு கொண்டு வரப்பட்டபோது அந்தக் கற்களை செங்குந்த மக்கள் தொடர்ச்சி யாக நின்று கைகளால் கற்களை மாறி மாறிக் கடத்தியே, கரவெட்டி கிழக்கிலுள்ள யாக்கரை விநாயகர் ஆலயத்தினை கட்டி முடித்தார்கள் என இந்தப் பரம்பரையினர் குறிப்பிடுகின்றனர்.**

நல்லூர் முருகன் ஆலயத்தைவிட வட மராட்சி வல்லிபுர ஆழ்வார், வயல்வெளிக் கந்தசுவாமி கோவில், ஒட்டுசுட்டான் கோவில், யாக்கரை பிள்ளையார் கோவில், நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில், பருத்தித்துறை பசுபதீஸ்வரர் கோவில், நுணாவில் பிள்ளை யார் கோவில் மாமங்கேஸ்வரர் கோவில் என்பவற்றிற்கும் செங்குந்தப் பரம்பரை யினரே கொடிச்சேலை கொடுத்து வருகின்ற னர்.

**செங்குந்த மக்கள் கொடிச்சேலை வழுங்கும் மரபு எவ்வாறு உருவானது?**

தில்லையில் கோவில் என சிறப்பித்துக் கூறப்படும் சிதம்பரத்தில் எழுந்தருளியிருக் கும் நடராஜப் பெருமானுக்கு பூசை செய்யும் பாக்கியம் சந்தான குரவருள் ஒருவரான உமாபதி சிவாச்சாரியாருக்கு கிடைத்தது.

உமாபதி சிவாச்சாரியார் சிதம்பரத்தில் உச்சிக் காலப் பூசையை நணபகல் 12 மணிக்கு முடித்துக்கொண்டு தமது உதவி யாளர்களுடன் வீடு நோக்கிச்செல்வது வழமை. ஒருநாள் தில்லைநகரை ஆட்சி செய்யும் மன்னன் **திரியம்பகச் சோழன்** இதனைக் கண்டான். அன்றிலிருந்து உமா பதி சிவாச்சாரியாரை வெயிலில் செல்ல விடாது, சிவிகை (பல்லக்கு), தீவர்த்தி முத லிய விருதுகளைக் கொடுத்துச் சென் றான்.

அன்றிலிருந்து உமாபதி சிவாச்சாரி யார் பல்லக்கிலேயே பூசைக்குச் சென்று வந்தார். இதனைக் கண்ணுற்ற **மறை ஞான சம்பந்த சிவாச்சாரியார்** ஒரு நாள் உமாபதி சிவாச்சாரியார் ஆலயத்திற்கு பல்லக்கில் சென்றவேளை வழி மறித்து மறைஞான சம்பந்தர்- (இறந்து பட்ட மரத் தினால் செய்யப்பட்டது சிவிகை, அதைக் காவும் கொம்புத் தடியும் இறந்த மரத் தினாலேயே செய்யப்படுகின்றது) பட்டப் பகலில் குருடன் மட்டுமே தீவர்த்தி கொழுத் திக் கொண்டுபோவான் என்ற பொருள்பட "பட்டகட்டையிற் பகற் குருடன் போகின் றான் பாருங்கள்" எனக் குறிப்பிட்டார். உடனே உமாபதி சிவாச்சாரியார் பல்ல க்கை விட்டு இறங்கி, மறைஞான சம்பந் தரின் பாதங்களில் விழுந்து வணங்கி அவரைக்குருவாகஏற்றுக்கொள்ள எண்ணி பல்லக்கினை விட்டு இறங்கியபோது, தான் அவதூறு பேசியதால் தன்னை அடிப் பதற்காக உமாபதி வருகிறார் என்று எண்ணிய மறைஞான சம்பந்தர் முன் னால் ஓட அவரைப் பின்னால் தொடர்ந்து உமாபதியும் சென்றார். இருவரும் ஒருவ ரின் பின் ஒருவராக நெசவு நெய்யும் தொழிலைச்செய்துவரும்செங்குந்த மக்கள் வாழும் பகுதியினை அடைந்துவிட்டனர். அப்போது தாகம் மிக வாட்டியதால் செங் குந்தரை தாகத்திற்கு ஏதாவது தரும்படி மறைஞான சம்பந்தர் கேட்டார். எம்மிடம் "**கஞ்சிக்கூழே இருக்கிறது**" எனக் கூறி அவர்கள் மறைஞான சம்பந்தரின் கை களில் கஞ்சிக்கூழை அள்ளிவாக்க அவ ரின் கைகளினால் வழிந்த கூழை தன்னு டைய இரண்டு கைகளினாலும் அள்ளிக் குடித்தார் உமாபதி சிவாச்சாரியார்.


இதனால் ஆத்திரமடைந்த ஏனைய அந்தணர்கள் மன்னனிடம் முறையிட்ட னர். மன்னன் அன்றிலிருந்து நடராஜப் பெருமானுக்கு பூசை செய்ய உமாபதிக்கு மறுப்புத் தெரிவித்தான். மன்னனால் அவ மானப்படுத்தப்பட்ட மறைஞான சம்பந்தர் செங்குந்தர்கள் வாழும் கொற்றவன் குடி சையில் அன்று முதல் வாழ்ந்து வந்தார். இதனால் அவருக்கு "**கொற்றவன் குடி முதலி**" என்ற பெயர் வழங்கலாயிற்று.

இவ்வாறிருக்க, மார்கழி மாதத்தில் தில்லைவாழ் அந்தணர் திருவிழா ஆரம் பமாகியது. ஆலயத்திற்கு தில்லைவாழ் அந்தணர்களினால் வழங்கப்பட்ட கொடிச் சேலை அரைக்கம்பத்தில் அறுந்து விழுந் தது. இதனால் குழப்பமடைந்த அந்தணர் களும் அரசனும் நடராஜப்பெருமானிடம் முறையிட்டனர். அப்போது "**உமாபதியே பூசை செய்யவேண்டும்**" **என்றும் "அவர் பருகக் கூழைக் கொடுத்த செங்குந்தர் நெய்து கொடுத்த கொடிச்சேலையே ப்ரீதி" என அசரீரி கேட்டது.** இந்த அசரீரி யைக்கேட்ட தில்லைவாழ் அந்தணர் களும் அரசுனும் உமாபதி சிவாச்சாரியாரிடம் சென்று தம்மை மன்னிக்குமாறு வேண் டிக் கொண்டனர். உடனே உமாபதியார், "கொடிக்கவி" பிரபந்தத்தைப் பாட செங் குந்தர் கொடுத்த கொடி வழுவில்லாமல் மேலே ஏறியது. அன்றிலிருந்து செங்குந்தர் கொடுத்த கொடிச்சேலையே தில்லையில் ஏற்றப்படுகின்றது.

-சிகரம்.நெற்-

## நல்லூரான் கொடிச்சேலையும் அவ்வாறே...!





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் வீரவன்சவுக்கு கொலை அச்சுறுத்தல்

## விசாரணை ஆரம்பம்

அமைச்சர் விமல் வீரவன்சவிற்கு தொலைபேசியில் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கறுவாத்தோட்டப் பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

அமைச்சர் விமல் வீரவன்சவின் பாதுகாப்பு பிரதான பொலிஸ் பரிசோதகர் சிசில் குமாரவினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலியிடம் குறிப்பிட்டுள்ளனர்.

அமைச்சர் விமல் வீரவன்சவின் ஆலோசனைக்கு அமைய முறைப்பாடு செய்ததாக பொலிஸ் பரிசோதகர் சிசில் குமார கூறியுள்ளார்.

கொலை அச்சுறுத்தல் விடுக்க பயன்படுத்தப்பட்ட 2 தொலைபேசி இலக்கங்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் அமைச்சர் விமல் வீரவன்சவிடமும் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் கறுவாத்தோட்ட பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# பாதுகாப்பு அமைச்சின் கீழ் சிறைச்சாலைகள் திணைக்களம்?

(கொழும்பு)

சிறைச்சாலைகள் திணைக்களத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவருவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக குறிப்பிடப்படுகின்றது. நாடு முழுவதிலும் உள்ள சிறைகளில் நடக்கும் முறைகேடுகள், மோசடிகள், சட்டவிரோத செயல்கள் போதைப் பொருள், பாதாள உலக செயற்பாடுகள் காரணமாக சமூக ரீதியாக பாரதூரமான நிலைமை உருவாகியுள்ளன. இதன் காரணமாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் சிறைச்சாலைகளை கொண்டு வருவது குறித்து ஆராயப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

சிறைச்சாலைகள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு என்ற அமைச்சர் பதவி இல்லாமல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிறைச்சாலைகளை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவது காலத்திற்கு உகந்த செயல் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(அ-2)

# யானைக்கால் நோய் அற்ற நாடு இலங்கை

## சுகாதார அமைச்சு தகவல்

தெற்காசிய வலயத்திலேயே யானைக்கால் நோயை இல்லாமல் செய்த முதல் நாடு இலங்கை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்விடயம் குறித்து அமைச்சு மேலும் தெரிவிக்கையில்,

யானைக்கால் நோயை இல்லாமல் செய்த நாடு என்ற சான்றிதழை உலக சுகாதார அமைப்பிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

யானைக்கால் நோய் இலங்கைக்கு பாரிய சவாலாக விளங்கியதாகவும் நோயை கட்டுப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையால் யானைக்கால் நோயை நாட்டில் இருந்து விரட்ட முடிந்துள்ளது.

இருந்த போதும் யானைக்கால் நோய் இலங்கையில் இருந்து முழுமையாக விரட்டப்பட்டுள்ளதா என்பதனை கண்டறிய சுகாதார அமைச்சு தற்போது கணிப்பை மேற்கொண்டு வருகிறது.

இந்த கணிப்பிற்கு அமெரிக்க வோஷிங்டன் பல்கலைக்கழகத்தின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# நுவரெலியாவில் அதிக பனிமூட்டம்

## மக்களுக்கு எச்சரிக்கை

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது அதிக பனிமூட்டம் நிலவுவதாக மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார். சில பகுதிகளில் ஆட்களை அடையாளம் காண முடியாதவாறு அதிக பனிமூட்டம் நிலவுவதாகவும் இதனால் வாகன விபத்துக்கள் இடம்பெறக்கூடிய சாத்தியம் உள்ளது. எனவே, சாரதிகள் அவதானமாக வாகனம் செலுத்த வேண்டும் என கேட்டுள்ளார்.

அதிக பனிமூட்டம் காரணமாக நேற்று முன்தினம் பேருந்து ஒன்றும் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன் காரணமாக நுவரெலியாவுக்கு பயணிக்கும் வாகனங்கள் மின்விளக்குகளை ஒளிரச் செய்த வண்ணம் பயணிப்பது சிறந்தது. இதேவேளை, மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் தென்படுவதால் அது குறித்தும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றார். (அ-2)

# வெளிநாடுகளில் நன்மதிப்பை உயர்த்திக்கொள்ள வேண்டும்

## இலங்கைக்கு நெதர்லாந்து தூதர் அறிவுரை

(கொழும்பு)

இலங்கை, நன்மதிப்பை உயர்த்திக் கொள்ள முயற்சிக்க வேண்டுமென நெதர்லாந்து அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது. யுத்தம் காரணமாக உலக அரங்கில் இலங்கை தொடர்பாக ஏற்பட்ட நிலைப்பாட்டை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இலங்கைக்கான நெதர்லாந்தின் துணைத் தூதர் பாஸ் வான் நூர்டினி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் இலங்கை தொடர்பான நன்மதிப்பை உயர்த்துவதன் மூலம் பொருளாதார இலக்குகளை அடைய முடியும். வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்தல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தொடர்ந்தும் ஓரளவு தயக்கம் காட்டி வருகிறது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னரான இலங்கையின் நிலைமைகள் குறித்து பிரசாரம் செய்ய வேண்டியது அவசியமானது. இலங்கையில் பணியாற்றுகின்றேன் என்று குறிப்பிட்டபோது நெதர்லாந்து மக்கள் என்னிடம் கேட்கும் முதல் கேள்வி தமிழீழ விடுதலைப்புலிகள் பற்றியதேயாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பல தொழிற்றுறைகளில் முதலீடு செய்ய நெதர்லாந்து பிரஜைகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். வெளிநாடுகளில் இலங்கை தொடர்பான நன்மதிப்பை உயர்த்திக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# பொலிஸாரின் நடமாடும் சேவை சுன்னாகத்தில் நாளை நடைபெறும்

(சுன்னாகம்)

சுன்னாகப் பொலிஸாரின் நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் சுன்னாகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

தேசிய அடையாள அட்டை,சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பெறுமதியான ஆவணங்களை தொலைத்தவர்களுக்கான பொலிஸ் முறைப்பாடுகள் செய்தல், வீதிப்போக்குவரத்து ஒழுங்கு பயிற்சிகள், மருத்துவ சேவை உட்பட பல்வேறு சேவைகளும் இதில் நடைபெறவுள்ளன.

உடுவில் பிரதேச செயலகத்தை சேர்ந்த ஜே/185 உடுவில் மத்தி வடக்கு, ஜே/186 உடுவில் வடக்கு, ஜே/195 சுன்னாகம் வடக்கு, ஜே/196 சுன்னாகம் தெற்கு, ஜே/197 சுன்னாகம் கிழக்கு, ஜே/198 சுன்னாகம் மத்தி, ஜே/199 சுன்னாகம் மேற்கு, ஜே/200 கந்தரோடை, ஜே/202 ஏழாலை தென்மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த மக்களை கலந்து கொண்டு பயன்பெறுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ-9)

# கிழக்கில் நாம் மட்டுமே வாழ வேண்டும் தமிழர்களின் கோரிக்கை இதுதான்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

தேசிய அரசியலுக்குள் ஊடுருவியுள்ள பிரிவினைவாத சக்திகள் இன்று கிழக்கு மாகாணத்தில் புலிகளின் ஆக்கிரமிப்பு போன்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் விரட்டிவிட்டு தமிழர்கள் மாத்திரம் கிழக்கில் வாழ முயற்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும் என அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மன்னார் விடயத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு நீதி வழங்க வேண்டும். அரசாங்கம் நியாயமான முறையில் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிடின் பிரிவினைவாத சக்திகளின் உள்நோக்கங்கள் கிழக்கில் அரங்கேறிவிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

மன்னார் நீதிபதியை அச்சுறுத்தியதாக பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. உண்மையில் நீதித்துறை மீது அச்சுறுத்தல்கள் விடுப்பதனை அனுமதிக்க முடியாது. அதேபோன்று மன்னார் முஸ்லிம் மீனவர்களுக்கும் நீதி வழங்க வேண்டும். கிழக்கில் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் குடியேற்றங்களை தடுக்கும் வகையிலான பாரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இதனை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

முன்பு புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளின் ஊடாக வடக்கு, கிழக்கு பகுதி காணிகளை ஆக்கிரமித்தனர். இதேபோன்றதொரு நிலையே கிழக்கிலும் உதயமாகின்றது என்றார். (அ-2)







யாழ்.எயிட் நிறுவனத்தினால் யாழ். மிருசுவில் கெற்பேலி அ.த.க.பாடசாலையில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட சமூகசேவையாளரும் புலம்பெயர் வாழ் ஈழத்தமிழருமான உமாசுதன் மாணவர் ஒருவருக்கு கற்றலுக்கான உதவிப் பொருட்களை வழங்குவதையும் உதவிப்பொருட்களைப்பெற்ற மாணவர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பீர்பாலும் அக்பரின் செல்லக் கிளியும்



ஒருமுறை சக்கரவர்த்தி அக்பருக்கு அவரது குடி மக்களுள் ஒருவர் ஓர் அழகிய கிளியைப் பரிசளித்தார்.

## பீர்பால் கதைகள்

அக்கிளிக்கு பேசவும் பாடவும் பயிற்சியளிக்கப்பட்டிருந் தது.

அக்பர் இந்தப் பரிசைப் பெற்று மிகவும் மகிழ்ந்தார்.

அக்கிளியை ஒரு தங்கக் கூண்டில் வைத்து வளர்த்தார். அவர் அக்கிளியைப் பார்த்துக் கொள்ள இரண்டு வேலை ஆட்களை நியமித்தார்.

இக் கிளியை பகலிலும் இரவிலும் நன்கு பார்த்துக் கொள்வது உங்களது கடமை.

யார் என்னிடம் வந்து இக்கிளி இறந்து விட்டது எனக் கூறுகிறானோ அவனுக்கு மரணதண்டனை நிச்சயம்! என்றார் அக்பர்.

அந்த இரு வேலையாட்களும் கிளியைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக் கொண்டனர்.

அதற்கு தினந்தோறும் நல்ல உணவளித்து அதன் கூண்டினையும் சுத்தமாக வைத்திருந்தனர்.

அவ் வேலையாட்கள் கிளியைப் பார்த்துக் கொள்வதில் நேரம் செலவிட்டதில் அவர்களைப் பற்றியே மறந்தனர்.

நாளுக்கு நாள் அவர்கள் மெலிந்தும் வலுவற்றவர்களாகவும் மாறினர். ஆனாலும் அவர்கள் கிளிக்கு ஒரு தீங்கும் நேராமல் பார்த்துக் கொண்டனர்.

ஒரு இரவு அவர்கள் மிகுந்த அசதியில் சற்று நேரம் கண் அயர்ந்து விட்டனர்.

அடுத்த நாள் காலை அந்தக் கிளி உயிரற்றுக் கிடந்ததைக் கண்டனர்.

அந்த இரு வேலையாட்களும் பயத்தில் நடுங்கினர்.

அவர்கள் கிளியின் மரணத்தைப் பற்றி மன்னரிடம் கூற அஞ்சினர்.

யார் கிளியின் மரணத்தைப் பற்றி கூறுகிறானோ அவனுக்கு மரணதண்டனை என மன்னர் எச்சரித்திருப்பதால் என்ன செய்வதென அறியாமல் இருந்தனர்.

எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நாம் பீர்பாலைக் காண்போம்.

அவர் நமக்கு நிச்சயம் உதவி செய்வார்!... அவர்களுள் ஒருவன் கூறினான்.

அவ்விருவரும் பீர்பாலின் இல்லம் சென்று கிளியைப் பற்றியும் அக்பரின் எச்சரிக்கையைப் பற்றியும் கூறினர்.

நீங்கள் தான் எங்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்.

நீங்களே எங்களைக் காப்பாற்றவில்லை என்றால் யாரும் எங்களைக் காப்பாற்றமாட்டார்கள்! என்றனர்.

எல்லாவற்றையும் என்னிடம் விட்டுச் சென்று கவலையின்றி இருங்கள்.

நான் எல்லாவற்றையும் கவனித்து மன்னரிடம் பேசிக் கொள்கிறேன் என்றார் பீர்பால்.

பீர்பால் அக்பரைக் காணச் சென்றார்.

பாதுஷாவே! உங்களுக்கு ஒரு வியப்பான செய்தி கொண்டு வந்துள்ளேன்.



உங்களது கிளி பேசாமல் பாடாமல் இருக்கிறது.

அதன் கண்கள் மூடி ஒரே இடத்தில் அசையாமல் கிடக்கிறது.

ஒருவேளை அது தியானத்தில் உள்ளதோ? பீர்பால் ஆச்சரியப்பட்டார்.

என்ன! என் கிளி இறந்து விட்டதா?... அக்பர் அதிர்ந்தார்.

எனது கண்ணால் நான் காண வேண்டும்.

பீர்பால் அக்பருடன் கிளி இருக்கும் அறைக்குச் சென்றார்.

பார் எனது கிளி இறந்து விட்டது! என்று அக்பர் அழுதார்.

நீங்கள் கூறுவது உண்மை தான். பீர்பால் ஒப்புக் கொண்டார்.

பின்னர் அவர் அக்பரின் எச்சரிக்கையைப் பற்றி அவரிடம் நினைவூட்டினார். நீங்கள் அவர்களிடம் யார் முதலில் கிளியின் மரணச் செய்தியை என்னிடம் சொல்கிறானோ அவனுக்கு மரணம் நிச்சயம் என்றீர்கள்.

அதனால் அவர்கள் தங்களிடம் கூறவில்லை.

என்னிடம் உதவி கேட்டு வந்தனர். நானும் உங்களிடம் கிளி இறந்து விட்டது எனக் கூறவில்லை. நீங்களே அவ்வாறு சொன்னீர்கள்.

அக்பர் தான் அவ்வாறு தனது வேலையாட்களிடம் சொல்லியிருக்கக் கூடாது என வருந்தினார்.

எனது தவறைச் சுட்டிக் காட்டியதற்கு நன்றி பீர்பால்! என்றார் அக்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச்சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் நான்காம் நாளாகிய இன்று வெள்ளிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் புலவர் போற்றிடும் புலவர் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை இளம் சொற்பொழிவாளர் நி.பகீர்தரன் ஆற்றுவார்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கம் மகா கணபதி அறநெறிப் பாடசாலை, இளவாலை சித்திரமேழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் நான்காம் நாளாகிய இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை திருமுறைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாட்டு பிரம்மஸ்ரீ விஸ்வ.பிரசன்னா, வயலின் எ.ஜெயராமன், மிருதங்கம் எஸ்.துரைராசா, முகர்சிங் எஸ். செந்தூரன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# போரில் காணாமல் போனவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்கப்படவில்லை

## சுரேஷ் எம்.பி.யின் குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

போரின்போது காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கப்படவில்லை என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

போரின்போது காணாமல் போனவர்களுக்கு இராணுவத்தினர் மரணச் சான்றிதழ் வழங்கி வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைய பிறப்பு மற்றும் மரண சான்றிதழ்களை வழங்கும் அதிகாரம் மாவட்ட பதிவாளருக்கு காணப்படுகின்றது.

பயங்கரவாத நடவடிக்கைகள், இயற்கை அனர்த்தங்களின் போது காணாமல் போனவர்கள் தொடர்பில் 2010 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இராணுவத்தினரோ அல்லது வேறு படையினரோ பிறப்பு அல்லது மரணச் சான்றிதழ்களை வழங்க முடியாது.

இராணுவத்தினர் மீது சாதாரண மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை சீர்குலைக்கும் நோக்கில் இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ-2)

# காணாமல்போன பலருக்கு குற்றச்செயல்களுடன் தொடர்பு

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படும் பலர் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் அவ் அமைச்சு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் காணாமல் போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட பலர் பாரியளவு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் இந்த ஆண்டு மார்ச் மாதம் வரையில் 18 பேர் மட்டுமே காணாமல் போயுள்ளதாகவும் சில தரப்பினர் காணாமல் போனோர் எண்ணிக்கையை திரிபுபடுத்தி எண்ணிக்கை 56 என தகவல் வெளியிட்டு வருகின்றனர்.

போதைப்பொருள் கடத்தல், கப்பம் கோரல், கடத்தல் போன்ற சமூக விரோத செயல்களுடன் தொடர்புடைய நபர்களே காணாமல் போனதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


காணாமல் போதல் சம்பவங்களுடன் அரசாங்கத்திற்கு தொடர்பு இருப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது. எதிர்த்தரப்பினால் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் கடத்தப்படுவதாகவும் இது தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## வரலட்சுமி விரதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி விளைவேலி துர்க்கை அம்மன் ஆலய வரலட்சுமி விரதம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. அதனை அடுத்து காப்பு நூல் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். (அ-3-29

# கறுக்காய் குள புனரமைப்பில் அதிகாரிகள் அசமந்தப்போக்கு




## மக்கள் குற்றச்சாட்டு

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கறுக்காய் குளம் புனரமைப்புக்காக 7 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டும் பூரணமாக புனரமைப்பு வேலைகள் இடம்பெறவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்புனரமைப்பு வேலைக்காக நிதி ஒதுக்கப்பட்டு கடந்த 2010 ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டு புனரமைப்பு வேலைகள் இடம்பெற்ற போதிலும் நீர்ப்பாசன வாய்க்கால்கள், துருசு வேலைகள் என்பன இன்னமும் இடம்பெறவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு அனைத்து புனரமைப்பு வேலைகளையும் உரிய தரப்பினர் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று நான்காம் திருவிழா



### நல்லருள் தாராயோ

நல்லையம் பதியிலே நாடிவரும்
பக்தருக்கு நல்லருள் தாராயோ
உன்னை வேண்டிடும் மெய்யடியார்
குறைகளை நீ தீராயோ
உன்னடியே தஞ்சமென்று உன்னை
நாடும் பக்தருக்கு அருளாயோ
நல்லருள் தாராயோ நல்லைக்குமரா
உன்னடியே சரணம் என்போம்
நல்லையம்பதியானே

*சந்துரு,*
*திருநெல்வேலி.*

### திருக்குமரன் தந்த வரம்

வீசு புகழ் நல்லை நகர்
விளக்கி நிற்கும் தத்துவங்கள்
தேசுபிறை திருவழகன்
திருக்குமரன் தந்த வரம்
மாசகற்றி மா தலத்தை
மாட்சியுடன் ஆட்சி செய்யும்
பாசமிகு தமிழ்க்குரவா
பற்றிடுவாய் எம் கரத்தை

*வி.சி.குஞ்சிதபாதபம்,*
*கூத்தாடி.*

### நல்லைக்கந்தன் பாமாலை

முருகனே முத்துக்குமரனே அருள் அளிப்பவனே
காவியக் கந்தனே கருணை வடிவானவனே
மாங்கனி வேண்டி உலகைச்சுற்றிய பாலகனே
கனி கிடைக்கவில்லையென்று ஆண்டியானவனே
ஔவையின் தமிழ்கேட்டு அடி பணிந்த அப்பனே
ஏழை எங்களை உன் அருள்தந்து காத்திட
நல்லைக் கோயிலில் கந்தனாய் அமர்ந்து
அருள்தந்து காப்பாய் எங்கள் அப்பனே

*ஸ்ரீ.பிரதீப்,*
*திருநெல்வேலி.*

### நல்லைக்கந்தனுக்கு ஒரு பாமாலை

ஈழநாட்டிலே வடபகுதியிலே
சைவம் தழைத்தோங்கும்
எம் யாழ்ப்பாணப் பதியினிலே
நல்லைக் கந்தனுக்கு திருவிழா
அது நமக்கும் திருவிழா
வள்ளி தெய்வயானை சகிதமாக
அலங்காரக் கோலத்துடன் நீ வந்தாய்
நல்வினைகளையும் தந்தாய்
நல்லூரானுக்கு வந்திடுங்கள்
நல் வேதங்களைக் கற்றிடுங்கள்
தமிழ் பண்பாட்டை நாம் கடைப்பிடித்திட்டால்
தமிழ்க் கடவுளுடன்
நாம் சரணாகதி ஆகிவிடலாம்

*மு.நித்தி,*
*தாவடியூர்.*

### அடியார் குறை தீர்ப்பாயோ

நெடி துயர் நல்லையம் பதிதனிலே- ஆழ்ந்தகன்ற
வடிவுடை திருக்கைவேல் ஏந்திய குமரா
கடிதுறும் உந்தன் சேவடி நாடி வரும்
அடியவர் துயர் தீர்ப்பாயோ

*எஸ்.நதிபரன்,*
*நல்லூர்.*




நல்லூர்க் கந்தனே எங்களைக் காத்திடப்பா!
ஸ்ரீ ரங்கன் என்ரப்பிறைஸ்
SRI RANGAN ENTERPRISES
370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 021 222 2027


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்புக்களை போமற் மாற்றி எடிட் செய்ய




அச்சடிக்கப்பட்ட (printed) கோப்புக்களை அல்லது ஸ்கான் செய்யப்பட்ட pdf கோப்புக்களை மீண்டும் எடிட் செய்யும் போர்மட்டிற்கு மாற்றுவதற்கு OCR எனும் உள்ளீட்டுக் கருவி பயன்படுகின்றது.

தற்போது இச்செயற்பாட்டினை ஒன்லைனில் செய்வதற்கான வசதியை http://www.onlineocr.net எனும் இணையத்தளம் தருகின்றது.

இத்தளத்தில் JPG, JPEG, BMP, TIFF, GIF நிலையில் காணப்படும் கோப்புக்களை Word, Text, Excel, PDF, Html ஆகிய போர்மட்டிற்கு மாற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

32 மொழிகளிலான கோப்புக்களை பயன்படுத்தக் கூடியதும் முற்றிலும் இலவசமான சேவையை வழங்குவதுமான இத்தளத்தினைப் பயன்படுத்திபயன்பெறமுடியும்.

## Dead mouse




Dead Mouse என்ற நீட்சியின் மூலம் மவுசை கிளிக் செய்யாமலேயே லிங்கை ஓபன் செய்து கொள்ள முடியும். இதற்கு முதலில் Dead Mouse என்ற நீட்சியை உங்கள் குரோம் உலாவியில் நிறுவிக் கொள்ளவும்.

நிறுவியதும் உங்கள் உலாவியை Reloadசெய்து கொள்ளவும். அதன் பின் ஏதேனும் இணையப்பக்கத்தீத கிளிக் செய்து அந்த பக்கத்தில் உள்ள லிங்கில் முதல் எழுத்தை டைப் செய்யவும்.

டைப் செய்த பின் அந்த எழுத்தில் உள்ள லிங்க் மேலும் கீழும் அசையும். அதன் பின் Enter அழுத்தினால் அந்த லிங்க் திறக்கும் புதிய டேபில் திறக்க Shift+ Enter கொடுக்கவும்.

உங்கள் கீபோர்டில் ஒரே பெயரில் நிறைய லிங்க் இருந்தால் Tab அழுத்தி சரியான லிங்கை தெரிவு செய்து Enter கொடுக்கவும்.

## CD-ROM ஐ Log செய்ய



கணனி விளையாட்டுகள், கார்ட்டூன்கள் போன்றவற்றை ஆவலுடன் விரும்பிப் பார்க்கும் குழந்தைகளிடமிருந்து கணனிகளைப் பாதுகாப்பது என்பது மிகவும் கடினமான விடயம் தான்.

ஆனால், அவர்களின் கணனிப் பாவனையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். அதில் ஒன்று தான் CD-ROM ஐ லொக் செய்து பாவனையை மட்டுப் படுத்துதல் ஆகும்.

இவ்வாறு CD-ROM இனை லொக் செய்வதற்கு சிறிய கோப்பு அளவுடைய LockCD எனும் மென்பொருள் முற்றிலும் இலவசமாகக் கிடைக்கின்றது.

இம்மென்பொருளைத்தரவிறக்கம் செய்து கணனியில் நிறுவுவதன் மூலம் தேவைக்கேற்றாற் போல் CD-ROM களை பயன்படுத்த முடியாதவாறு லொக் செய்ய முடியும்.

மேலும் சோர்ட்கட் கீக்கள் மூலம் இம்மென்பொருளைக் கையாள முடியும்.

# facebook

### 1.நண்பர்கள் பிரச்சினையா?





பேஸ்புக் கில் ஆரம்பத்திலேயே அநேகமானோர் நிறைய நண்பர்களை சேர்த்து விடுவார்கள். அதில் பலர் யார் என்றே நமக்கு தெரியாது. இதனால் முக்கியமான நண்பரை நமது நண்பராய் இணைக்க முடியாது. முக்கியமானவர்களின் Status களை பார்க்க இயலாத நிலை வரலாம். அதற்கு நமக்கு தெரியாத நண்பர்களை நாம் நீக்குவது அவசியமாகிறது. அதை எப்படி எளிதாக செய்வது என்று பார்ப்போம்.

முதலில் உங்கள் Profile பக்கத்துக்கு Timeline பக்கம் வந்து அதில் Friends என்று உள்ளதை கிளிக் செய்யவும்.

இப்போது வரும் பக்கத்தில் உங்கள் நண்பர்கள் அனைவரும் இருப்பார்கள். அதில் குறிப்பிட்ட ஒரு நண்பரின் பெயர் மீது Cursor கொண்டு செல்லவும். இப்போது அதில் Friends என்பது திக் செய்யப்பட்டிருக்கும். Friends க்கு உங்கள் Cursor ஐ நகர்த்தவும். அதன் கீழே ஒரு மெனு தோன்றும். அதில் Unfriend என்பதை க்ளிக் செய்து விடலாம்.

இவ்வாறு இல்லாமல் அவர் நண்பர் பட்டியலில் இருக்க வேண்டும். ஆனால் அவர் போடும் செய்திகள் எனக்கு வேண்டாம் என்று நினைத்தால் மேலே படத்தில் உள்ள Show in News Feed என்பதை Unclick செய்து விடவும். இரண்டில் எதை செய்ய விரும்புகிறீர்களோ அதை செய்து விடுங்கள்.

### 2.Chat இல் Seen ஐ நீக்க




பேஸ்புக்கில் நண்பர்களுடன் சட்டிங்கில் ஈடுபடும்போது ஒருவரால் அனுப்பப்படும் செய்தியை மற்றவர் பார்வையிட்டதனை உறுதிப்படுத்துவதற்கு Seen என்ற சொல்லுடன் கூடவே பார்வையிட்ட நேரத்தினையும் அனுப்பிய செய்தியின் கீழாக சுயமாகவே தெரியப்படுத்தப்படும்.

இவ்வாறு மீண்டும் மீண்டும் தெரி யப்படுத்துவதனை சிலர் இடையூறாகவும் கருதலாம். அப்படியாயின் அதனை நீக்கும் வசதி தற்போது காணப்படுகின்றது.

எனினும் இவ்வசதியானது கூகுள் குரோம் உலாவிகளுக்கு மட்டுமே பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.அதாவது குரொம் உலாவியீல் செயற்படக்கூடிய நீட்சி ஒன்றினை தரவிறக்கம் செய்து கணனியில் நிறுவிக் கொள்ளுவதன் அடிப்படையிலேயே இவ்வசதியினை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதன்மூலம் தேவைக்கு ஏற்றவாறு Seen என்பதை நீக்க முடிவதுடன் மீண்டும் தோற்றுவிக்கவும் முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

### 3.அநேக படங்களை அழகாக தரவேற்ற




பேஸ்புக்கில் பகிர நிறைய படங்கள் இருக்கிறதா? அவை எல்லாவற்றையும் பகிர்ந் தால் நண்பர்கள் அனைத்தையும் பார்க்க முடியாது என்று நினைக்கிறீர்களா? எல்லா படங்களையும் ஒரே படத்தில் இணைத்து பகிர முடிந்தால் எப்படி இருக்கும். அதற்கு உதவும் மென்பொருளின் பயன்பாடு பற்றிதான் பார்க்கப் போகிறோம்.

Collage Maker என்பது தற்போது பிரபலமாகி வரும் Digital Scrapbook மென்பொருள். இதன்மூலம் உங்கள் பல புகைப்படங்களையும் ஒன்றிணைத்து ஒரே படமாக மாற்ற முடியும். மிக அழகான Frame, Border, Template ,Backgrounds, Clip Art மற்றும் பல Effect களை உங்கள் படத்தில் சேர்க்க முடியும்.

இதை பல தளங்கள் ஒன்லைன் மூலம் செய்யும் வாய்ப்பை வழங்கி உள்ளன. என்றாலும் சில மென்பொருட்களும் இதற்கு உள்ளன.

இதை செய்ய உதவும் சில தளங்கள்.

Photovisi, photo Collage, Kizoa, picture2life, postermywall, Zefrank, fotonea, Foto flexer

மென்பொருள்

picture collage maker, sharp collage, Smile box

## You- tube இல் முகத்தை மறைத்தல்

வீடியோ ஏதாவது பார்க்க வேண்டுமென்றால் அனைவரும் செல்வது யூ-டியூப் தளத்திற்கு தான்.

பயனாளர்களுக்கு பல்வேறு வசதிகளை அளித்து வந்த யூ-டியூப் தற்போது முகத்தை மறைக்கும் (Face Blurring) வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கு முதலில் வீடியோ யூ-டியூப்பில் பதிவேற்றம் செய்தவுடன் Edit பகுதியில் Enhancement என்பதை கிளிக் செய்து அந்த வீடியோவிற்கு கீழே Additional Features என்பதை கிளிக் செய்யவும்.

அதில் Blur All Faces என்று காட்டும். அதை கிளிக் செய்து Apply என்று கொடுத்தால் வீடியோவில் உள்ள முகங்கள் மறைக்கப்படும். மறைக்கப்பட்ட வீடியோவின் Preview ஐயும் பார்க்கலாம்.

பின்னர் மேலே Save As என்பதை கிளிக் செய்தால் முகங்கள் மறைக்கப்பட்ட வீடியோ தனியாக உருவாக்கப்படும். Save என்பதை கிளிக் செய்தால் அதே வீடியோ மாற்றப்படும்.

மேலும் வீடியோவின் தரத்தை பொறுத்து சில நேரங்களில் வேலை செய்யாமல் இருக்கலாம் என்றும் யூ-டியூப் தெரிவித்துள்ளது.




## புதிய தொழில்நுட்பத்துடன் பிளெக்பெரி 10




கைபேசி உலகில் ஏனைய போன்களுக்கு சவால் விடும் அளவில் சந்தைப்படுத்தலிலும் தொழில்நுட்பத்திலும் பிளெக்பெரி போன்கள் போட்டியாகக் காணப்படுகின்றன.

தற்போது பல்வேறு புதிய அம்சங்களுடன் நவீன தொழில்நுட்பத்தீல் விரைவில் BlackBerry10 ஆனது புதிய பதிப்பாக அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது.

இதில் அப்பிள் கைபேசிகளின் ஒலி அமைப்பை ஒத்ததான ஒலிநயம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் குரல் பதிவுகளை அடிப்படையாகக் கொண்ட வசதி ஒன்றும் புதிதாக உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு பல புதிய அம்சங்களுடன் வெளியாகவுள்ள பிளெக்பெரி 10 ஆனது கைபேசி பாவனையாளர்களிடையே பலத்த வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை கறுப்போ சிவப்போ
எலி பிடித்தால் சரி
*– சீனப் பழமொழி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பிரதேசவாத அபிவிருத்தி வேண்டவே வேண்டாம்

அபிவிருத்தி என்ற எண்ணக்கரு பரந்தது. அது ஒருசில விடயங்களுடன் மட்டுப்படுத்தப் பட்டது அல்ல.

அதேநேரம் அபிவிருத்தி என்ற பதம் ஒரு மேல் எல்லையைக் கொண்டதும் அல்ல.

சுருங்கக் கூறின் சமாந்தரமாகப் பொருத்தப் பட்ட தளவாடிகளில் தோன்றும் முடிவிலி விம் பங்கள் போல் அபிவிருத்தியும் அப்படியானதே. எனவே அபிவிருத்தி என்பது ஒரு பக்கத்தில் அல்லது ஒரு சமூகத்தில் ஏற்படுவது அல்ல. மாறாக அது ஒரு முழுமைக்கும் பொருத்துடை தாக இருக்க வேண்டும்.

அந்த வகையில் வடபகுதியில் முன்னெடுக் கப்படும் அபிவிருத்திப் பணிகள் சமத்துவம் உடையதாக அமையவில்லை என்ற குற்றச் சாட்டுகள் நிறையவே உண்டு.

குறிப்பாக வடபகுதியில் இருக்கக் கூடிய முக் கிய பதவிகளில் உள்ள அதிகாரிகள் பிரதேச வாத உணர்வுடன் செயற்படுகின்றனர் எனவும்,

அதன் அடிப்படையில் வள ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படும் குற்றச் சாட்டுக்களை அடியோடு மறுத்துவிட முடியாது.

உதாரணமாக யாழ் மாவட்டத்தில் மருத்துவ சாலைகளை தரம் உயர்த்துவதில், அவற்றை திருத்தி அமைப்பதில் தீவுப் பகுதி புறக்கணிக்கப் பட்டு வருகின்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது.

நேற்றுக் கூட ஒரு அன்பர் இது சார்ந்த கட் டுரை ஒன்றை நேரில் ஒப்படைத்திருந்தார். அதில் யாழ் சுகாதார சேவைகள் திணைக்களத்திற் குட்பட்ட பிரதேச வைத்தியசாலைகள் எங் கெங்கு தரமுயர்த்தப்பட்டன – புனரமைக்கப்பட் டன அதற்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் குறித்து அக்குவேறு ஆணிவேறாக அந்தக் கட்டுரையில் ஆதாரப்படுத்தி இருந்தார்.

அந்தக் கட்டுரையின் ஆதாரங்களைப் பார்க் கும் போது தீவகத்தில் உள்ள வைத்தியசாலை களுக்கான வள ஒதுக்கீடுகள், தரமுயர்த்தல் கள், புனரமைப்புகள் மிகவும் மந்தமாக இருப் பதை காணமுடிகின்றது.

மண்டைதீவில் அழிவடைந்த வைத்திய சாலை இன்னமும் புனரமைக்கப்படாமல் அதில் இராணுவம் தங்கியிருப்பது தொடர்பில் அந்த ஊர் மக்கள் வெளியிடும் அதிருப்தி நியாய மானதே.

தங்கள் ஊர் வைத்தியசாலை இன்னமும் புனரமைக்கப்படாததன் காரணம் என்ன? அல்லைப்பிட்டி, மண்டைதீவு என இரண்டு ஊர்களுக்கு பொதுவாக இருக்கக் கூடி மண்டைதீவு அரசினர் வைத்தியசாலை திருத் தப்படாமல் இயக்கப்படாமல் இருப்பதன் அடிப் படை என்ன? என்ற நியாயமான கேள்வி களுக்கு உரிய அதிகாரிகள் பொறுப்புடன் பதில் அளிப்பது அவசியமானதாகும்.

# பாம்பு தீண்டிய பெண் அவசர சிகிச்சைப்பிரிவில்

(யாழ்ப்பாணம்)

கல்லிற்கு அடியில் இருந்த நாக பாம்பு தீண்டியதில் குடும்பப் பெண் ணொருவர் யாழ். போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரி வில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 9 மணி யளவில் காக்கைதீவுப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான சிறிதரன் வச ந்தி (வயது 38)என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானவராவார்.

குறித்த பெண் கணவரின் மீன் பிடி க்கும் வலையை சிறிய தென்னை மரம் ஒன்றில் காயவைப்பதற்காக விரித்து விட்டு அதனை எடுக்க முயன்றபோது அவ்வலை அருகிலுள்ள கல்லிற்குள் சிக்குண்டுள்ளது.

இதனால் அக்கல்லினை புரட்ட முயன்ற போதே கல்லின் அடியிலு ள்ள நாகபாம்பு பெண்ணின் கையில் தீண் டியுள்ளது.

எனினும் குறித்த பெண்ணின் வீட் டார் தீண்டிய பாம்பினையும் பிடித்தது டன் கடிக்கு இலக்கான பெண்ணை வைத்தியசாலையிலும் அனுமதித்து ள்ளனர்.

தீண்டிய பாம்பினை இனங்கண்ட மையால் இப்பெண்ணுக்கு இலகுவில் சிகிச்சையளிக்கமுடிந்தது என வைத் தியர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ–4)

# இரசாயனவியல் பரீட்சை நாளை

(யாழ்ப்பாணம்)

இலங்கை இரசாயனவியல் கழ கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் அவுஸ்திரேலியன் தேசிய இரசாயன வியல் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 8.30க்கு நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் பங்குபற்றுவதற்கு அறிவுறுத்தல் கடிதம் அனுப்பப்பட்ட பொறுப்பாசிரியர்களும் மாணவர்களும் யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியல் துறை பிரதான மண்டபத்திற்கு முன் பாக மேற்குறிப்பிட்ட நேரத்தில் ஒன்று கூடுமாறு பரீட்சையின் இணைப்பாளர் அ.லோகநாதன் கேட்டுள்ளார். (அ)

# வாய்க்காலில் கழிவுநீர் தேக்கம்; டெங்கு நுளம்புகள் பரவும் அபாயம்

## மக்கள் குற்றச்சாட்டு

திருநகர் பிரதான வீதியின் மேற்குப் பக்கமாக உள்ள 57ஆவது படைப் பிரிவின் அலுவலகத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள வாய்க்காலில் கழிவு நீர் தேங்குவதால் டெங்குநோய் பரவக் கூடிய அபாயநிலை உள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த வாய்க்காலில் உள்ள கழிவுநீர்துர்நாற்றம் வீசுவதுடன் சுகா தாரச் சீர்கேடான இடமாகக் காணப் படுகின்றது.

அப்பகுதியால் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே பயணிக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து இக்கழிவுநீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக் கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-263,264)

# ஆணைக்குழு அறிக்கையின் தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

## அடுத்தவாரம் வெளியீடு

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை யின் தமிழ் மற்றும் சிங்கள மொழி பெயர்ப்பு அடுத்தவாரம் வெளியிடப் படும் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

அனைத்து மக்களும் குறித்த அறிக் கையினைப் பார்வையிட வேண்டும் என்பதற்காகவே தமிழ் மற்றும் சிங் களம் ஆகிய மொழிகளில் குறித்த அறிக்கை மொழி மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

மிகச்சிறந்த முறையில் மொழி மாற் றம் செய்யப்பட்டுள்ள இந்த அறி க்கையினை அச்சிடும் பணியில் அரச அச்சக திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறி க்கை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்ய ப்பட வேண்டும் என ஐக்கிய அமெரிக்கா உட்பட பல அரசசார்பற்ற நிறுவனங்க ளினால் கோரிக்கை விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




உடல் மனிதனுக்குச் சொந்தமா னது. ஆனால் அதனை அவனே அழி க்க முடியாது. உடலை மனிதனே நீக் கினால் அது தற்கொலையாகிவிடும். இறைவனை வழிபட்டு மனித உடலை நீக்கும் நிலையைப் பெறமுடியும். மணி வாசகர் தனது வாழ்க்கையில் இத் தகையதொரு அனுபவத்தைப் பெற் றவர். இறைவனுடைய அடியார்கள் பலர் அவனுடைய திருவடி நீழலை அடைந்துவிட்டனர் என்று ஆதங்கப் படுகிறார்.

தேவாரம்பாடி இறைவனை நாளும் பொழுதும் வழிபட்ட மூவராகிய சம்பந்தர், சுந்தரர், நாவுக்கரசர் மூவரும் அவரு டைய நினைவுக்கு வருகின்றனர். சிற ப்பாகச் சம்பந்தர் 16 வயதிலும் சுந்தரர் 18 வயதிலும் இறைவனடி சேர்ந்தவர் கள்.

மணிவாசகரை இறைவன் வலிய வந்து ஆட்கொண்டவர். அப்படியிருந் தும் அவரால் இறைவன் தாள்களை அடையமுடியவில்லை. எனவேதன்னை இறைவன் முழுமையாக ஆட்கொள்ள வில்லையோ என்ற ஐயம் அவருக்கு ஏற்படுகிறது. பாவத்தின் பயனாய துன் பத்தை அனுபவிக்கவேண்டி நேரிட் டதே என வருந்துகிறார். இறைவ னைச் சிவலோகா என விளித்து அவர் பாடுவதை இறைவன் கேட்கவேண்டு மென்று விரும்புகிறார். சிவலோகம் செல்ல அவர் விரும்புகிறார். அங்கு இறைவன்திருக்கோலத்தைக்கண்ணாரக் காணலாம் என எண்ணுகிறார். கடின மனத்தோடு இறைவழிபாட்டை மறந் திருந்தமை மணிவாசகர் செய்த பிழை யாகும். இறைவனால் திருவடித்தீட்சை பெற்ற தெய்வீக அனுபவத்தை மீண் டும் பெற வழிதேடுகிறார். இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என அவர் பாடிய சிவபுரா ணத்தின் அடியும் இதனையே உணர்த் துகிறது.

குரு வடிவத்தைக் கண்ணார மீண் டும் காணவேண்டும் என்ற விருப்பு அவர் உலகியல் வாழ்வில் உள்ள வெறுப்பைச் சுட்டிநிற்கிறது. மனித நிலையில் குருவாக வந்த இறைவனை அவரால் கண்ணாரக் காணமுடிய வில்லை. காரணம் பக்திநெறியில் அவ ருடைய மனம் பக்குவமடையவில்லை. அதனால் மீண்டும் இறைதரிசனம் கிடையாமைக்கு மனப்பக்குவம் இன் மையேதான் என நன்கு விளங்கிக் கொள்கிறார். மனித இனம் சில வேளை களில் ஐம்புலன்களின் செல் வாக் கிற்கு உட்பட்டு இறைவழிபாட்டைப் புறந்தள்ளிவிடுவதுண்டு. பின்னர் தன் செயலை எண்ணி எண்ணி வருந்துவ துண்டு. இந்தநிலை ஏற்படாவண் ணம் மனிதன் தன் மனத்தைப் பக்குவப் படுத்திக் கொள்ளவேண்டும்.


நமது முன்னோரும் சமயகுரவ ரும் இதனையே எமக்குக் கூறிச்சென் றுள்ளனர். மணிவாசகரும் தனது மன த்தைப் பக்குவப்படுத்த முடியாமல் இரு ந்ததையே பல பாடல்களில் பாடியுள் ளார். மெய்யடியார்கள் ஐம்புலன்களின் வழிச் செல்லாமல் இறைவனை வழி பட்டு அவனடி சேர்ந்தார்கள். கசிவில் லாத மனமுடையவனான தான் இறை வனை அடையும் வழிபாட்டு நெறியைத் தொடரவில்லையே என எண்ணியே மணிவாசகர் துன்பப்படுகிறார். அவன ருள் இன்றி அவன்தாள் வணங்க முடி யாது. இதனை நாம் மறக்கக்கூடாது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மனித முயற்சிகள் கைகூடுவதற்கு இறைவழிபாடு இன்றியமையாதது. இறைவ னைக் காணவேண்டும் என்ற ஆசை எமக்குவேண்டும். அவனுடைய திருக் கோலத்தைக் கண்ணாரக்கண்டு கையா ரத் தொழ வேண்டும். இப்பணியை நாள் தோறும் தொடர்ந்து மனவிருப்போடு செய்யவேண்டும். இதுவே எம்மனங் களைப் பண்படுத்தி எம்மைச்சீர்மியம் செய்யும் வழியாகும்.

*அடியேன் அல்லேன் கொல்லோ*
*தானெனை ஆட்கொண்டிலை கொல்லோ*
*அடியாரானார் எல்லோரும்*
*வந்துன் தாள் சேர்ந்தார்*
*செடிசேர் உடலம் இது நீக்கமாட்டேன்*
*எங்கள் சிவலோகா*
*கடியேன் உன்னைக் கண்ணாரக்*
*காணுமாறு காணேனே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு மாணவர்களுக்கிடையிலான கரச் சுற்றுப் போட்டியில் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி சம்பியன் பட்டம் பெற்றுள்ளது. அவ்வணியினரைப் படத்தில் காணலாம்.

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களின் விளையாட்டு விழாவிற்கு விண்ணப்பித்த மாணவர்களை நாளை சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு முன்னர் பாடசாலைச் சீருடையுடன் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு வருகை தருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

---

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி. ஆர்.விஜயலட்சுமி, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

# மானிப்பாய் இந்து சமய விருத்தியின் வருடாந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்க முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/ விவேகானந்த வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் இந்து சமய விருத்திச் சங்கத் தலைவர் அ.மு.அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வே.சி. மருதலிங்கம், கௌரவ விருந்தினராக வலிகாம வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகனேசன், சிறப்பு விருந்தினர்களாக விவேகானந்த வித்தியாசாலை அதிபர் திருமதி. க. சரவணபவன், சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி யோகேந்திரன் கேமநளினி, சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி செல்வி. ம.மனோரஞ்சிதம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9)




# மாகாண மட்ட தடகளப் போட்டியில் அருணோதயாக் கல்லூரி மாணவர்களின் சாதனை




வடமாகாண தடகளப் போட்டியில் அருணோதயாக் கல்லூரி மாணவி செல்வி பவித்திரா 19 வயதுப் பிரிவில் கோலூன்றிப் பாய்தல், முப்பாய்ச்சலில் முதலாம் இடத்தினையும் நீளம் பாய்தலில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளார்.



வடமாகாண தடகளப் போட்டியில் அருணோதயாக் கல்லூரி றொசான் 19 வயதுப் பிரிவில் கோலூன்றிப் பாய்தலில் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.



வடமாகாண தடகளப் போட்டியில் அருணோதயாக் கல்லூரி மாணவி செல்வி தனுசா 21 வயதுப் பிரிவில் உயரம் பாய்தலில் முதலாம் இடத்தினையும் கோலூன்றிப் பாய்தலில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளார்.



வடமாகாண தடகளப் போட்டியில் அருணோதயாக் கல்லூரி மாணவி செல்வி காவேரி கோலூன்றிப் பாய்தல், 100 மீற்றர் ஓட்டத்தில் முதலாம் இடத்தினையும் 200 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளார்.

# மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி

(மல்லாவி)

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கான மாகாணமட்ட விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாற்றுத் திறனுடைய மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றுவதற்குரிய பேருந்து சேவை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய கல்விக் கோட்டங்களுக்குரிய மாணவர்களும் பொறுப்பாசிரியர்களும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரியில் அமைந்துள்ள விசேட கல்வி நிலையத்திற்கும் ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலை மாணவர்கள், பொறுப்பாசிரியர்கள் மாங்குளத்தில் உள்ள துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கும் சமூகம் தரும்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார்.பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் இரண்டு நாட்கள் தங்குவதற்குரிய ஒழுங்கமைப்புடன் மற்றும் போட்டிக்குரிய ஆவணங்கள் என்பவற்றுடன் பொறுப்பாசிரியர்களையும் உரிய நேரத்திற்கு அனுப்பிவைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-15)





வடமாகாண விளையாட்டு திணைக்களத்தால் நடத்தப்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்ற யாழ். மாவட்ட அணியினரையும் இரண்டாம் இடத்தினைப் பெற்ற மன்னார் அணியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
16
02
1932



உதிர்வு
25
07
2012

## அமரர்
## திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P.)
## வாரிவளவு, காரைநகர்

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பேரம்பலம் மாணிக்கம் அவர்கள் 25.07.2012 புதன்கிழமை அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் இ.ச.பேரம்பலம் (E.S.பேரம்பலம் கம்பனி, 50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், முன்னாள் நாத்தாண்டியா வர்த்தகரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, முத்துப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகளும், காலஞ்சென்ற சண்முகம்,பார்வதி தம்பதியினரின் மருமகளும், பராசக்தி, பரமேஸ்வரி, சௌந்தராம்பிகை, E.S.P. நாகரத்தினம், அன்னபாக்கியம், காலஞ்சென்ற பாலமணி, E.S.P.கணேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருஞானசம்பந்தன், சதாசிவம், சோமசுந்தரம், சண்முகராசா, தங்கமலர், சுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சண்முகநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சண்முகராஜன், சண்முகரத்தினி (அவுஸ்திரேலியா), ஞானேஸ்வரி (ஆசிரியை, முத்துத்தம்பி வித்தியாலயம், திருநெல்வேலி), சிவராசன் (கனடா), சிவரூபன் (லண்டன்), சிவகுமாரி (யாழ்ப்பாணம்), சிவகணேசன் (சிங்கப்பூர்), நந்தினி (கனடா), சாந்தகுமார் (அவுஸ்திரேலியா), சிவகுமார் (வவுனியா), கஜேந்திரன் (யாழ்ப்பாணம்), கஜமுகன் (கனடா), கமலநேசன் (அவுஸ்திரேலியா), கமலநாதன் (மொறட்டுவை பல்கலைக்கழகம்), கமலரூபன் (கொழும்பு பல்கலைக்கழகம்), ராஜசுலோஸினி (லண்டன்), கலைமகள் (கனடா), வாசுகி (யாழ்ப்பாணம்), அபிராமி (Holy Family Convent), செந்தூரன் (Colombo International School), வைஷிகா (Holy Family Convent), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அனுஷன், ஆரணி, வானதி, ஆரதி, சுவாதி, நிவேதன், கவிதன், ஆரங்கன், ஆர்த்தி, சாருஷன், கஜந்தன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் இல.11 பெதஸ்டா வீதி, கொழும்பு-05ல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் 29.07.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெற்று 10 மணிக்கு கொழும்பு பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல. 11, பெதெஸ்டா வீதி, Off டிக்மன்ஸ் வீதி, கொழும்பு - 05**
**0112503112, 0771106323, 0112542985, 0778177817.**

**தகவல் :**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

E.S.P. நாகரத்தினம் : E.S.P.Nagaratnam & Co, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
E.S.P.Nagaratnam & Co, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.
Kajamugan Hardware, 147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
S.P.N. Motors, 145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கஜமுகன் ஹாட்வெயார், [ஸ்டோர்ஸ்], 103, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12.

E.S.P. கணேசலிங்கம் : E.S.P.Trading Company Private Ltd, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
E.S.P. அன் கம்பனி, 41, அப்துல் ஜவார் மாவத்தை, கொழும்பு – 12.
E.S.P. அன் கம்பனி, 124, பழைய சோனகத் தெரு, கொழும்பு – 12

(C-635)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ வடக்கு மாகாண பொதுச் சேவை பதவிகள் ♦ முகாமைத்துவ உதவியாளர்,
ஏனைய போட்டிப் பரீட்சைக்கான பொது உளச்சார்பு, பொது அறிவு, மொழித்திறன், விசேட வகுப்புக்கள் (097)
ஆரம்பம் : 28.07.2012 சனி 10.00am ♦ சனி, ஞாயிறு 10.00 - 12.00 noon
பட்டப் படிப்புக்கள் கல்லூரி
58/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இலங்கை வங்கி முன்பாக)
மேலதிக தொடர்பு - T.P - 0771753838

## தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கை நெறி கொழும்பு பல்கலைக்கழகம்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். O/L பயின்றோரும் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலம் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். விரிவுரைகள் வார, வாரஇறுதி ஞாயிறு மட்டும் என 3 பிரிவுகளாக நடைபெறும். இம்மாணவர்களிற்கு கணினிப்பொறியியலாளர் கற்கைநெறிகளிற்கான புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. மேலதிக விபரங்களை இல.324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம். -இணைப்பாளர், BIT கற்கை நெறி

MCS தகவல் தொழில் நுட்ப வளாகம் ☎ 0212226373, 0772395895ம்.

BIT சிறந்த பெறுபேற்றுக்காக சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்
Send sms <Name>,<Address>,<Course>to772395895&get scholarship

Supported by United Nation Development Programme / Jaffna Rehabilitation & Resettlement Projects.

## மாபெரும் இலவசக் கருத்தரங்கு A/L 2012

| பொருளியல் | கணக்கீடு |
|---|---|
| திரு. S.S.சிறி | திரு. S.S. கருணதாஸ் B.B.A.(Hons) P.G.Dip.Edu (Distinction) |
| சனி 1.00 pm - 5.30pm -28th July | வெள்ளி 1.00 pm -5.30pm -27th July |

இடம்: யாழ்ப்பாண கல்லூரி (வட்டுக்கோட்டை)
♦ மாணவர்கள் இலகுவாக புள்ளியை பெறுவது தொடர்பான வழிகாட்டல்
♦ மாதிரி வினா விடைகள் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்: 0773722104 (சி-625)

**BIT** பின்வரும் பாடநெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்.
Bachelor's of Information Technology
(External Degree School of Computing, University of Colombo)
கொழும்பு பல்கலைக் கழக வெளிவாரி பட்டப்படிப்பினால் நடத்தப்படும் Bachelor's of Information Technology (BIT)கற்கை நெறிக்கு எமது நிறுவனத்தில் பதிவு செய்து கற்கை நெறியை தொடங்கவும்.
Director,
Jaffna College Institute of Technology.
Vaddukoddai
T.P No.021 321 3139 / 021 222 8275
E-Mail jcit@sltnet.lk www.jcit.lk

# 37 வது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 . 07 . 1926



உதிர்வு 27 . 07 . 1975

அமரர் உயர்திரு கலாநிதி
## அல்பிரட் தங்கராஜா துரையப்பா (J.P.U.M)
(AT துரையப்பா அல்பிரட் - முன்னாள் யாழ்.மாநகர முதல்வர்)

அமரர் ஒக்ஸ்பேட் பல்கலைக்கழகத்தில் படித்த சட்டத்தரணியும், முன்னாள் இலங்கை சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளரும் மும்மொழிபேசும் இலங்கை மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியவரும் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும் பட்டினத்தில் நவமயமாக பல கட்டிடங்களைக் கட்டி திறப்பு விழாவில் பண நோட்டுக்களால் அலங்கரிக்கப்பட்டு மாலை போட்டு கௌரவிக்கப்பட்ட முதல் செயல் வீரர் அவர். G.G. பொன்னம்பலம் ஐயாவின் அன்பு மருமகனும் அமரர் யாழ் டாக்டர் A.T.T. பரமேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும் திருமதி ஈ.சா அம்மா அவர்களின் பாசமுள்ள டடியும் ஆவார். இலங்கையில் வடபகுதி யாழ்ப்பாணத்தில் உள்ள பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகக் கொண்ட அவரின் 37ஆவது நினைவஞ்சலி இன்று 27.07.2012 யாழ் துரையப்பா அரங்கிலுள்ள அவரது சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி நடத்தப்படும். இன்றைய திகதியில்தான் நமது துரையப்பா அவர்கள் யாழ் பொன்னாலை வரதராஜ கிருஷ்ணன் கோவிலில் கும்பிடும் போது அகாலமரணமானது உலகமெல்லாம் தெரிந்ததே. இன்று கிறிஸ்தவ ஆலயங்களிலும், இந்து ஆலயங்களிலும் வழிபாடுகள் நடத்தப்படும்.

தங்கள் நினைவுகளுடன்
K.A. வைகுந்தநாதன் A.C.J.P
(முன்னாள் யாழ் மாநகர பாதுகாப்புத்துறை உத்தியோகத்தரும், தற்போது அரசசேவையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஓய்வூதியரும் சுதந்திரக்கட்சி அங்கத்தவரும் இலங்கை சமாதான நீதிவானும்)
வடமராட்சி, கரவெட்டி
(090)

## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுடன்
சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்,

- 11 kg க்கு மேற்பட்ட 1 kg பொதிகளுக்கும் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.

| | | | |
|---|---|---|---|
| UK | 1 kg - 625/= | Germany | 1 kg - 725/= |
| France | 1 kg - 750/= | Netherland | 1 kg - 775/= |

- மேலும் மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் புடவைகள் CD, VCD கள் என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
- உங்கள் இல்லங்களில் இருந்த வண்ணம் பொதிகளை அனுப்பிட முடியும். இவ் வசதிகளை கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு ஆகிய எமது கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
- மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். கடல் உணவு, மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும் வெளிநாடுகளில் மேலதிக கட்டனம் அறவிடப்படமாட்டாது.

குறிப்பு: எமது நிலையம் தொடர்ந்தும் 259 கே.கே. எஸ் வீதியில் இயங்கிங்கொண்டிருக்கிறது.
TCN Express

**திருமுருகன் கொம் நெற்**
இல. 210, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 2 B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2
இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

ANDRA வின் ஆதரவில் **மாபெரும் இசைநிகழ்ச்சி**



யாழ்குடா நாட்டில் முதன் முறையாக
உலகத் தமிழர்களை தன் செல்லக்குரலால் வியக்கவைத்த
விஜய்TV ஜீனியர் சுப்பர் சிங்கர் புகழ் பாடகி
**அல்கா அஜித்துடன்**
மற்றும்பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து கலக்கும்

அல்காவின் ஆனந்த ராகங்கள்

நாளை மாலை 6.00 மணிக்கு
வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கலையரங்கில்
இம்மாதம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில்

அனுசரணை
Aircom E Travels & Tours
இல.06, சிராம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி அருகில் யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2219113
WESTERN UNION | Money Master

ரிக்கற் கிடைக்கும் இடங்கள்
ANDRA டிஜிற்றல் இமேஜ் 0750404144
எயார்கொம் ரவல்ஸ் 021 2219113
த போன் சொப் - நெல்லியடி 021 2263770

திருமண அழைப்பிதழ்கள்



ANDRA WEDDING CARDS
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பனிமனைக்கு அருகில்)
Tel : 0212228929, 0217200000
Mob : 0776622981, 0777481696.
திருமண அழைப்பிதழ்களின் சாம்ராட்சியம்

நுழைவுச்சீட்டுக்கள் : 200/= 300/= 500/= மற்றும் VIP
Event Manegement : CEYLON ART CREATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.